**தினமணி**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**10.06.2013 A.M**

---

## மாடித் தோட்டம் அமைக்க பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிற்சி மையம் சார்பில் வீட்டு மாடியில் தோட்டம் அமைப்பது குறித்து ஒருநாள் பயிற்சி திங்கள்கிழமை (ஜூன் 10) அளிக்கப்படுகிறது.

இது குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக தகவல் மற்றும் பயிற்சி மைய தலைவர் பெ.சாந்தி வெளியிட்டுள்ள செய்தி: வீட்டிலுள்ள மாடிப்பகுதியில் காய்கறி மற்றும் மூலிகைப் பயிர்களை வளர்ப்பதால் வீட்டின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஆண்டு முழுவதும் வீட்டுக்குத் தேவையான பழம், காய்கறிகள் கிடைப்பதுடன் சிறு, சிறு உடல் உபாதைகளைத் தவிர்க்க மூலிகை வைத்தியம் செய்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கிறது.

எளிய முறையில் மாடித் தோட்டம் அமைப்பது குறித்த ஒரு நாள் பயிற்சி, அண்ணா நகர், 10-ஆவது தெருவில் ஜெயகோபால் கரோடியா பள்ளியின் பின்புறத்தில் உள்ள பல்கலைக் கழக பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது. வீட்டிலிருப்போர், மாணவர்கள், சுய உதவிக்குழுவினர், இளைஞர்கள், தொண்டு நிறுவனத்தினருக்கு இது நல்ல வாய்ப்பாக அமையும்.

காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பயிற்சியளிக்கப்படும். பயிற்சியின் போது, பயிற்சி பற்றிய குறிப்பேடு, கையேடு, மதிய உணவு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

## காரைக்கால் வாரச் சந்தையில் காய்கறி விலை கடும் உயர்வு

காரைக்காலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வாரச் சந்தையில் பல்வேறு காய்கறிகள் விலை கடுமையாக உயர்ந்திருந்தது.

காரைக்கால் முருகராம் நகர் அருகேயுள்ள நகராட்சித் திடலில் ஞாயிற்றுக்கிழமைதோறும் வாரச் சந்தை நடைபெறுகிறது. சுமார் 200 வியாபாரிகள் வெளியூரிலிருந்து லாரிகளில் காய்கறிகளை முதல் நாளே கொண்டு வந்து இறக்கி, சந்தையில் விற்பனை செய்கின்றனர்.

உள்ளூர் வியாபாரிகளும் இச்சந்தையில் வியாபாரம் மேற்கொள்கின்றனர்.

சந்தைக்குச் சென்றால் பொருள் மலிவாக கிடைக்குமென பொதுமக்கள் நம்பிச் செல்கின்றனர். ஆனால், கடந்த 3 வாரங்களாக பொருள்களின் விலை கணிசமாக உயர்ந்தே இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

காரைக்காலில் ஞாயிற்றுக்கிழமை சந்தையில் நாட்டுத் தக்காளி கிலோ ரூ.50 முதல் ரூ.60 வரையிலும், பீன்ஸ் கிலோ ரூ.120, பெரிய வெங்காயம்(பெல்லாரி) கிலோ ரூ.20, நாட்டு வெங்காயம் (சிறியது) கிலோ ரூ.80 முதல் ரூ.100, பூண்டு ரூ.60 முதல் ரூ.80, பீட்ரூட் கிலோ ரூ.40, பச்சை மிளகாய் கிலோ ரூ.40, இஞ்சி கிலோ ரூ.200 என விற்கப்பட்டது.

## வேளாண்மை அலுவலர்களுக்குப் பயிற்சி முகாம்

பண்ணைப் பயிர் மேலாண்மைத் திட்டங்கள் குறித்து, மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை அலுவலர்களுக்கு திண்டுக்கல்லில் விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பண்ணைப் பயிர் மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து, வேளாண்மைத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும் விழிப்புணர்வுக் கூட்டம், தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. ஏற்கெனவே, 19 மாவட்டங்களில் இந்த கூட்டம் நடந்து முடிந்துள்ளது.

அதேபோன்று, மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை அலுவலர்களுக்கு, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இந்த விழிப்புணர்வுப் பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, திண்டுக்கல் வேளாண்மை இணை இயக்குநர் என்.டி. சம்பத்குமார் தலைமை வகித்தார். இதில், வேளாண்மை தகவல் சேவை வலைதளம் மூலம், சென்னை வேளாண்மை இயக்குநர் அலுவலக உதவி இயக்குநர்கள் பி. வெங்கடாசலபதி மற்றும் ஆர். ரகுராமன் ஆகியோர் விளக்கம் அளித்தனர்.

களப் பணிகளுக்குச் செல்லும் அலுவலர்கள், நிலத்தில் வேளாண்மைத் துறை மூலம் எடுக்கப்பட்ட மண் மாதிரிகளை சேகரிக்க வேண்டும். அதேபோல், படிவம் 1 இல் ஒவ்வொரு விவசாயினுடைய நிலத்தின் அடிப்படை விவரங்கள் மற்றும் வங்கிக் கணக்குகளை பதிவு செய்து, மார்பளவு புகைப்படங்களையும் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டது.

இது குறித்து, வேளாண்மை தரக் கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் கே. செல்வராஜ் தெரிவித்தது:

விவசாயிகளிடம் பெறப்படும் தகவலின் அடிப்படையில், ஒவ்வொரு விவசாயிக்கும் அடிப்படை குறியீட்டு எண் வழங்கப்படும். மேலும், மண் மாதிரிகளின் ஆய்வு முடிவுகளுக்கு ஏற்ப சாகுபடி

செய்ய வேண்டிய பயிர், கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள், இடுபொருள்கள் குறித்தும் பரிந்துரை செய்யப்படும்.

இதன்மூலம், கிராம அளவில் அதிகபட்ச மகசூல் பெற்ற விவசாயிக்கு இணையான மகசூலை, அனைத்து விவசாயிகளும் பெற வழி ஏற்படும். அதே நேரம், உற்பத்தி செய்யப்பட்ட விளை பொருள்களை அதிக விலை கிடைக்கக் கூடிய விற்பனை மையங்களில் கொடுத்து விவசாயிகள் பயன்பெறலாம் என்றார்.

மதுரை மாவட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநர்கள், வேளாண்மை அலுவலர்கள், அட்மா திட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் என 40 பேருக்கு முற்பகலில் பயிற்சி வழங்கப்பட்டது.

திண்டுக்கல் வட்டார உதவி இயக்குநர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் உள்பட 130 பேர் பிற்பகலில் நடந்த பயிற்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## வறட்சி நிவாரணம் வழங்கல்

காரியாபட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம், 3 ஆயிரத்து 564 பயனாளிகளுக்கு, வறட்சி நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கூட்டுறவு கடன் வங்கித் தலைவர் விஜயன் தலைமை வகித்தார். துணை தலைவர் ராஜாங்கம், வீட்டு வசதி வாரிய துணை தலைவர் விஜயராஜன், கூட்டுறவு பால் பண்ணை தலைவர் பாண்டியராஜன் முன்னிலை வகித்தார்.

வறட்சி நிவாரணத் தொகையை பயனாளிகளுக்கு வழங்கி, நிர்வாகக் குழு உறுப்பினர் பழனி பேசியதாவது: காரியாபட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் வங்கி மூலம், ஒரு கோடியை 49 லட்சத்து 3 ஆயிரத்து 640 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் சார் பதிவாளர் ரவீந்திரன், செயலர் ரஜினிகாந்த் மற்றும் நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வாழைக்காய் வரத்து குறைவு; விலை உயர்வு

மேட்டுப்பாளையம் நால்ரோட்டில் இயங்கி வரும் "தி வாழைக்காய்' ஏல மையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்திற்கு வாழை வரத்து குறைந்ததால், தார் ஒன்றுக்கு ரூ. 50 முதல் ரூ. 100 வரை விலை அதிகரித்து விற்பனை ஆனது.

வாழை வரத்து மற்றும் விலை நிலவரம் குறித்து வாழைக்காய் ஏல மைய நிர்வாகி வெள்ளியங்கிரி கூறியது:

மேட்டுப்பாளையம், காரமடை, சிறுமுகை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வாழை சாகுபடி, ஆண்டு முழுவதும் நடைபெறுகிறது. இப்பகுதியில் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் நேந்திரன், பூவன், ரோபஸ்டா, செவ்வாழை வாழை ரகங்களைப் பயிரிடுகின்றனர்.

மேட்டுப்பாளையம் பகுதியில் கடந்த மாதம் தொடர்ந்து வீசிய சூறைக்காற்றால் சிறுமுகை, லிங்காபுரம், தேக்கம்பட்டி, வெள்ளியங்காடு, பெத்திக்குட்டை மற்றும் பவானிசாகர் அணையின் நீர்த்தேக்கப் பகுதிகளில் பயிரிடப்பட்டு அறுவடைக்குத் தயாராக இருந்த 10 லட்சத்திற்கு மேற்பட்ட வாழைகள் சேதமடைந்தன. இதனால் வாழை விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

இதன் காரணமாக ஞாயிற்றுக்கிழமை மொத்த வாழைக்காய் ஏல மையத்தில் நடைபெற்ற ஏலத்தில் வாழை வரத்து குறைந்து காணப்பட்டது. மொத்தம் 2,000 வாழைத் தார்கள் விற்பனைக்கு வந்தன. ஒரு கிலோ சராசரியாக ரூ. 30 வரை விற்கப்பட்டது.

அதில் நேந்திரம் ரக வாழை, 700 தார்கள் விற்பனைக்கு வந்து, கிலோ ரூ. 40-வரை விற்பனையாயின. பூவன் ரகம் (500 தார்கள்) ஒரு தார் ரூ. 430 வரையும், பச்சை நாடன் (30 தார்கள்) ரூ. 300 வரையும், ரோபஸ்டா ரகம் (250 தார்கள்) ரூ. 300 வரையும், ரஸ்தாளி ரகம் (300 தார்கள்) ரூ. 330 வரையும், சாம்பல் ரக வாழை (150 தார்கள்) ரூ. 350 வரையும், செவ்வாழை ரகம் (60 தார்கள்) ரூ. 800 வரையும் விற்பனை செய்யப்பட்டன.

இந்த ஏலத்தில் அனைத்து ரக வாழைகளும் கடந்த மாதத்தை விட தார் ஒன்றுக்கு ரூ. 50 முதல் ரூ. 100 வரை விலை அதிகரித்து விற்பனை ஆனதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மேட்டுப்பாளையம், தாயனூர், சத்தியமங்கலம், அவிநாசி மற்றும் திருச்சி மாவட்டப் பகுதிகளிலிருந்து விவசாயிகள் பெருமளவில் வாழைத்தார்களைக் கொண்டு வந்திருந்தனர். இதில், மைசூர், கோவை, நீலகிரி, தர்மபுரி, திருப்பூர், ஈரோடு மற்றும் கேரளா மாநில பகுதிகளிலிருந்து வந்த வியாபாரிகள் வாழைத்தார்களை கொள்முதல் செய்தனர். வரத்து குறைவால், வியாபாரிகளிடையே பலத்த போட்டி நிலவியது.

## சேமிப்புக் கிடங்கில் தீ: ரூ.7 கோடி மதிப்பிலான கொப்பரை சேதம்

காங்கயம் அருகே தனியார் சேமிப்புக் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் இருப்பு வைக்கப்பட்டிருந்த ரூ.7 கோடி மதிப்பிலான மஞ்சள், கொப்பரை தீயில் எரிந்து சேதமடைந்தன.

காங்கயத்தில் ஏராளமான தேங்காய் உலர் களங்கள் உள்ளன. இங்கு காயவைக்கப்படும் உலர் தேங்காயை இருப்பு வைப்பதற்கு ஏராளமான தனியார் சேமிப்புக் கிடங்குகள் உள்ளன.

காங்கயத்தையடுத்த வீரணம்பாளையம் கரூர் சாலையில் சிவக்குமார் என்பவருக்கு சொந்தமான விளைப்பொருள் சேமிப்புக் கிடங்கு உள்ளது. இந்தச் சேமிப்பை கிடங்கை மும்பையைச் சேர்ந்த நேஷனல் கொலட்ரல் செக்யூரிட்டி மேனேஜ்மென்ட் என்ற நிறுவனத்துக்கு சொந்தமான 600 டன் தேங்காய் உலர் கொப்பரை பருப்புகளும், 400 டன் மஞ்சளும் இருப்பு வைக்கப்பட்டிருந்தது. இதற்கு அருகே உள்ள மற்றொரு கிடங்கில் நெல், அரிசி இருப்பு வைக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் கொப்பரை இருப்பு வைக்கப்பட்டிருந்த கிடங்கில் திடீரென தீப்பற்றி எரியத் துவங்கியது. எண்ணெய் எடுக்கும் பக்குவத்தில் இருந்த கொப்பரை தேங்காய்களால் தீ மளமளவென பரவி, கொழுந்துவிட்டு எரிந்தது. 100 அடி நீளம் கொண்ட இந்தக் கட்டடம் முழுவதும் தீ ஒரே நேரத்தில் எரியத் துவங்கியதால், சுவர், மேற்கூரைகள் வெடித்து சிதறின.

காங்கயம், தாராபுரம், வெள்ளக்கோவில் பகுதிகளைச் சேர்ந்த தீயணைப்பு வீரர்கள் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அருகே இருந்த நெல் இருப்பு வைக்கப்பட்டிருந்த கிடங்கில் தீப் பரவாமல் இருக்க முதல் கட்ட நடவடிக்கை மேற்கொண்டனர். தீ அதிக அளவில் பற்றி எரிந்து கொண்டிருந்ததால், தீயணைப்பு வீரர்களால் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, பொக்லைன் இயந்திரம் வரவழைக்கப்பட்டு, கிடங்கின் சுவர்கள் தகர்க்கப்பட்ட பின்னரே தீயை அணைக்கும் முயற்சியில் ஓரளவுக்கு வெற்றி பெற முடிந்தது. தொடர்ந்து 10 மணி நேரம் போராடி, தீயைக் கட்டுப்படுத்தினர்.

தீ அதிகமாக இருந்ததால், அப் பகுதியே புகை மண்டலமாகக் காட்சியளித்தது. தீயணைக்கும் வாகனங்களுக்கு தேவையான தண்ணீரை லாரிகள் மூலம் எடுத்து வரப்பட்டது. இந்தத் தீ விபத்தில் சுமார் ரூ.7 கோடி மதிப்புள்ள கொப்பரை, மஞ்சள் எரிந்து சாம்பலானது. இதுகுறித்து காங்கயம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

## வாழை இலை விலை உயர்வு

வாழை இலை வரத்து குறைவால் இலைக்கான தேவை அதிகரித்து, விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

பல்லடம் பகுதிக்கு கோவையில் இருந்து வாழை இலை வரத்து நின்றுவிட்டதால், தூத்துக்குடி, தஞ்சை, திருச்சி, கும்பகோணம் பகுதியில் இருந்து வரும் வாழை இலைகளை மட்டுமே நம்பி இருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

அதிக அளவில் சுப காரியங்கள் நடைபெறுவதால், வாழை இலை விலை உயர்வு அதிகரித்துவிட்டது. 100 இலை கொண்ட ஒரு கட்டு வைகாசி மாதத்துக்கு முன் ரூ.250 முதல் ரூ.350 வரை விற்றது. தற்போது ரூ.2300-க்கு விற்பனையாகிறது.

ஒரு சாப்பாட்டு இலை (தலைவாழை இலை) ரூ.2-க்கு விற்றது. தற்போது இதன் விலை ரூ.13. இதே போல், டிபன் இலை, பிரியாணி இலை ஆகியவற்றின் விலையும் பலமடங்கு அதிகரித்துவிட்டது.

ஆடி மாதம் மட்டுமே வாழை இலை விலை குறையும் என்று இலை வியாபாரி குளித்தலை கதிர்வேல் தெரிவித்தார். வாழை இலை விலை உயர்வால் பல்லடத்தில் உள்ள பல ஒட்டல்களில் பார்சல் சாப்பாட்டுக்கு வாழை இலைக்கு பதிலாக பிளாஸ்டிக் சீட்டுகளை பயன்படுத்த துவங்கிவிட்டனர்.

## கவுண்டம்பாளையத்தில் வறட்சி நிவாரணம் வழங்கல்

பல்லடம் கவுண்டம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் வறட்சி நிவாரணத் தொகை வழங்கும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது . இதில், விவசாயிகள் 186 பேருக்கு ரூ.10 லட்சத்து 40 ஆயிரம் மதிப்பிலான வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டது.

கூட்டுறவு வங்கித் தலைவர் நாச்சிமுத்து தலைமை வகித்தார். ஒன்றிய கவுன்சிலர் ரத்தினசாமி முன்னிலை வகித்தார்.

வறட்சி நிவாரணத் தொகையை வழங்கி, பல்லடம் எம்எல்ஏ பரமசிவம் பேசியது:

பொங்கலூர், வீரபாண்டி பிரிவு, மங்கலம், காரணம்பேட்டை, கொடுவாய் ஆகிய 5 இடங்களில் கூட்டுறவு சங்கத்தின் மூலம் 15 சதவீதம் தள்ளுபடி விலையில் மருந்து விற்பனைக் கடை துவங்க அனுமதி பெறப்பட்டு உள்ளது. இம் மாத இறுதிக்குள் மருந்துக்கடைகள் திறக்கப்படும்.

பல்லடம் உழவர் பணிக் கூட்டுறவு சங்கத்தின் மூலம் நடத்தப்படும் மருந்துக் கடையில் விற்பனை எதிர்பார்ப்புக்கு மேல் நடைபெற்று, நல்ல லாபத்தில் இயங்குகிறது. 24 மணி நேரமும் மருந்துக்கடை செயல்பட வேண்டும் என்ற மக்கள் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது. விற்பனை அதிகரித்தால், தள்ளுபடி சலுகையை அதிகப்படுத்த அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர் என்றார்.

கவுன்சிலர் தண்ணீர்பந்தல் நடராஜன், கரைப்புதூர் ஊராட்சித் தலைவர் நடராஜ், பல்லடம் வேளாண்மை விற்பனை கூட்டுறவு சங்கத் தலைவர் சித்துராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

## பவானிசாகரில் ரூ.10 கோடியில் மீன் குஞ்சு வளர்ப்பு தொட்டிகள் கட்டும் பணி

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள பவானிசாகரில் ரூ.10 கோடி செலவில் மீன் குஞ்சுகள் வளர்ப்பு தொட்டிகள் கட்டும் பணி துரிதமாக நடந்து வருகிறது.

பவானிசாகர் அணையில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் சார்பில், மீன்பிடிப்பு உரிமம் குத்தகைக்கு விடப்படுகிறது. அணையில் ஜிலேபி, ரோகு, மிருகால், கறிமீன், சொட்டவாளை, கட்லா வகை மீன்கள் உள்ளன.

தென்மேற்கு பருவமழை காரணமாக ஜூன், ஜூலை மாதங்களில் அணையில் தண்ணீர் அதிகமாக இருக்கும்போது மீன் குஞ்சுகள் விடப்படும். முன்னதாக மீன் பண்ணை தொட்டியில் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு, அதன் வளர்ச்சிக்கேற்ப அணையில் விடப்படும். அணையில் சுமார் 300 டன் மீன்கள் இருப்பு உள்ளதாகத் தெரிகிறது.

மீன் வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் மீன் வளத்தை பெருக்கவும், அணையையொட்டி மீன் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள மீன் பண்ணையில் 30 லட்சம் மீன் குஞ்சுகள் மட்டுமே வளர்க்கப்படும்.

இதையடுத்து, மீன் பண்ணையை விரிவுபடுத்தி 50 லட்சம் மீன் குஞ்சுகள் வரை உற்பத்தி செய்ய, நபார்டு நிதியுதவித் திட்டத்தின் கீழ் ரூ.10 கோடி செலவில் மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்புக்காக 35 தொட்டிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

கட்டடத் தொழிலாளர்களைக் கொண்டு கான்கிரீட் தளம் அமைக்கும் முறை மாறி, தற்போது நவீன தொழில்நுட்பத்துடன் இயந்திரங்களைக் கொண்டு கான்கிரீட் போடப்படுகிறது. ஜல்லி, சிமெண்ட், தண்ணீர் ஆகிய மூன்றையும் தேவைக்கேற்ற விகிதத்தில் கலந்து அதனை தனிக்குழாய் மூலம் கொண்டுசென்று கான்கிரீட் தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் புதிய

முறையால் குறைவான நேரத்தில் அதிகமான வேலைகளை நிறைவேற்ற முடியும் என பொறியாளர்கள் தெரிவித்தனர்.

## உழவர் பெருவிழாவில் 31,000 மண் மாதிரிகள் சேகரிப்பு

ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாக்களில் 31,000 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் இருந்து மே 20 ஆம் தேதி வரை பல்வேறு இடங்களில் உழவர் பெருவிழா நடத்தப்பட்டது. இதில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினர்.

விழாவில் பங்கேற்ற விவசாயிகளின் நிலத்தில் இருந்து மண் மாதிரிகள் எடுக்கப்பட்டன. பரிசோதனைக்காக எடுக்கப்பட்ட மண்ணில் இருந்து, தழைச்சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்து ஆகிய பேரூட்டச் சத்து, நுண்ணூட்டச் சத்து ஆகியவற்றின் அளவுகள் எடுக்கப்பட்டன. ஈரோடு மாவட்டத்தில் 14 வேளாண் விரிவாக்க மையத்தின் வேளாண்மை, தோட்டக்கலை, விற்பனைத் துறை அலுவலர்கள் மூலமாக, 31 ஆயிரம் விவசாயிகளிடம் இருந்து மண் மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த மண் மாதிரியின் பரிசோதனை அடிப்படையில், வரும் நாள்களில் எந்தவிதமான பயிர்கள் சாகுபடி செய்வது, அதற்கு தேவையான சத்துகள், உரம் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடுகளை அதிகாரிகள் வழங்கி வருகின்றனர்.

இதுகுறித்து வேளாண்மை அதிகாரிகள் கூறியது: தனியார் மண் பரிசோதனை மையங்களுக்கு இணையாக, அரசு மையங்களில் மண் பரிசோதனை செய்யப்படுகிறது. கடந்த காலங்களில் குறிப்பிட்ட சத்து விவரங்கள் மட்டுமே கண்டறிந்து தெரிவிக்கப்பட்டு வந்தது.

நடப்பாண்டிலிருந்து நுண்ணூட்டச் சத்தின் விவரமும் தரப்படுகிறது.

தனியார் கூடத்தில் சோதனைக்கு ரூ.500 வரை கட்டணம் செலுத்த வேண்டும். ஆனால், அரசின் மையங்களில் ரூ.20 மட்டும் செலுத்தினால் போதும். ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து விவசாயம் செய்தால், அதிக லாபம் அடையலாம்.

உழவர் விழாவில் எடுக்கப்பட்ட மண் மாதிரிகளின் முடிவுகள், ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு மூலமாக வழங்கப்படுகிறது என்றனர்.

## குடியாத்தத்தில் கொப்பரை கொள்முதல் நிலையம்

வேலூர் மாவட்டத்திலேயே அதிக அளவில் தென்னை மரங்கள் உள்ளதால், குடியாத்தம் பகுதியில் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என அரசுக்கு தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

குடியாத்தத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சங்கத்தின் மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில், இதற்கான கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

இப்போது மானாவாரி பயிர்கள், பயிரிடும் காலம் என்பதால் விவசாயிகளுக்குத் தேவையான நிலக்கடலை, சோளம், துவரை உள்ளிட்ட விதைகளை மானிய விலையில் வழங்க வேண்டும். வங்கிகள் மூலம் உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். முறையாக கணக்கெடுப்புப் பணி நடத்தி, பாதிப்புக்குள்ளான அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் சங்கத்தின் மாவட்டத் தலைவர் டி.சி. ஜெகன்நாதன் தலைமை வகித்தார். மேற்கு மாவட்டத் தலைவர் ஆனந்தகுமார் வரவேற்றார்.

மாநில துணைச் செயலர் ஆர். பாலாஜி நாயுடு, கொள்கை பரப்புச் செயலர் கே.எம். நந்தகோபால், மாவட்ட துணைச் செயலர் ஏகாம்பரம், மாவட்ட அமைப்பாளர் மார்கபந்து கவுண்டர், சேம்பள்ளி பூபதி உள்ளிட்டோர் பேசினர்.

## "இயற்கையோடு இணைந்த வாழ்வே மனிதனை உயர்த்தும்'

இயற்கையோடு இணைந்த வாழ்வே மனிதனை உயர்த்தும் என்று திருவண்ணாமலை மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் பா.இந்திரராஜன் கூறினார்.

வந்தை வட்ட கோட்டைத் தமிழ்ச் சங்கம் சார்பில் பாதிரி கிராமத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கலைவிழாவில், அவர் மேலும் பேசியதாவது:

மனித வாழ்க்கைக்குத் தேவையான சுத்தமான காற்று, ஆரோக்கியமான உணவு, சூழலுக்கேற்ற உடை ஆகியவற்றை இயற்கைதான் நமக்கு பரிசாக வழங்கி வருகிறது. காடுகளையும், மரங்களையும் நமது அன்றாடத் தேவைக்காக வெட்டுவதன் மூலம் சுற்றுச்சூழல் மாசடைகிறது. இதனால் புவி வெப்பமடைகிறது.

40 மைக்ரானுக்கு கீழேயுள்ள பிளாஸ்டிக் பைகளை நாம் பயன்படுத்தக் கூடாது. நாம் நன்றாக வாழ இயற்கையை அழியாமல் காக்க வேண்டும் என்றார்.

விழாவுக்கு சங்கத் தலைவர் அ.மு.உசேன் தலைமை வகித்தார். வந்தை வட்ட கோட்டைத் தமிழ்ச் சங்க ஆலோசகர் மு.முருகேஷ், திருவண்ணாமலை மாவட்ட தமிழ்ச் சங்க துணைத் தலைவர் ப.குப்பன், மாவட்ட பிரதிநிதி லதா பிரபுலிங்கம், சங்கச் செயலர் பா.சீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பண்ணைக் குட்டைகள் அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் தங்கள் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் விஜய் பிங்ளே கேட்டுக் கொண்டார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் விவசாய நிலங்களை மேம்பாடு செய்ய ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் விளைநிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைத்திட முதல்வர் அறிவித்துள்ளார். இவற்றில் திருவண்ணாமலை மாவட்டத்துக்கு 4,000 பண்ணைக் குட்டைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தங்கள் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க விரும்பும் விவசாயிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அடையாள அட்டை பெற்றவராக இருக்க வேண்டும். ஆதிதிராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளாக இருக்க வேண்டும்.

கிராம சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டியலில் விவசாயியின் பெயர் இடம்பெற்றிருத்தல் வேண்டும். இத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் பண்ணைக் குட்டைகள் ஒப்பந்ததாரர் மூலமோ அல்லது இயந்திரங்களைக் கொண்டோ மேற்கொள்ளக் கூடாது.

விருப்பமுள்ள விவசாயிகள், உதவி வேளாண் அலுவலர்களிடம் சான்றிதழ் பெற்று சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரிடம் அளிக்க வேண்டும். ஒரு பயனாளியின் நிலத்தில் தேவைப்படும் பல்வேறு அளவுக்கு ரூ.23,990 முதல் ரூ.1,47,802 வரையான தொகைக்கு பண்ணைக் குட்டைகள் அமைக்கலாம். இத் தொகை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பயனாளிகளுக்கு ஊதியமாக வழங்கப்படும்.

இவ்வாறு உருவாக்கப்படும் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்த்தல் மற்றும் நீரை சேமித்து வைத்து பாசனத்துக்கு பயன்படுத்துவதன் மூலம் வேளாண் வருமானம் பெருகும். எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இத் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம் என்றார் ஆட்சியர் விஜய் பிங்ளே.

## மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி

திருவண்ணாமலையில் மண் புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

இம்முகாமில், தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் சிலிபாலின் பை முறையில் மண் புழு உரம் தயாரிப்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. திருவண்ணாமலை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் ஆர்.சந்திரசேகர் இப் பயிற்சியைத் தொடங்கி வைத்தார்.

மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஆர்.சக்ரவர்த்தி, திண்டிவனம் எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் ஜெயராமன், வேளாண்மை உதவி இயக்குநர் வி.சத்தியமூர்த்தி ஆகியோர் பேசினார்.

## மேட்டூர் அணை வறண்டதால் மீன் பிடித் தொழில் பாதிப்பு

மேட்டூர் அணை வறண்டதால், மீன் பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

பருவ மழை பெய்யாததாலும், காவிரியில் கர்நாடகம் தண்ணீர் திறந்துவிடாததாலும் மேட்டூர் அணைக்கு போதிய நீர்வரத்து இல்லாததால், அணை வறண்டது. இதனால், அணையில் போதிய அளவுக்கு மீன்கள் பிடிபடாததால், மீனவர்கள் தங்களது தொழிலைக் கைவிட்டு வேறு தொழிலுக்குச் செல்கின்றனர்.

60 சதுரமைல் பரப்பளவு கொண்ட மேட்டூர் அணையில் பிடிக்கப்படும் முதல் ரக மீன்களான கட்லா, ரோகு, மிர்கால் உள்ளிட்ட 30 வகையான மீன்களுக்கு நுகர்வோர்கள் மத்தியில் அதிக வரவேற்பு இருந்து வருகிறது. மீன்வளத் துறை சார்பில் அணையில் உள்ள மீன்களை பிடிப்பதற்கு 2 ஆயிரம் மீனவர்கள் உரிமம் பெற்றிருந்தனர். கீரைக்காரனூரிலிருந்து பாலாறு வரை உள்ள காவிரி கரையோரங்களில் இந்த மீனவர்கள் முகாமிட்டு மீன்களைப் பிடித்து வந்தனர்.

தற்போது, காவிரியில் நீர்வரத்து இல்லாததால், மீன் பிடிப்புப் பகுதிகள் வறண்டுக் காணப்படுகிறது. இதனால், மீன் பிடித் தொழிலை நம்பியிருந்த மீனவர்கள் தங்கள் முகாம்களைக்

காலி செய்துவிட்டு குடும்பத்துடன் சொந்த ஊருக்குத் திரும்புகின்றனர். இந்த நிலையில், வேலைவாய்ப்பு இழந்துள்ள மீனவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கடவூர் ஒன்றியத்துக்குள்பட்ட 20 ஊராட்சிகளில் வறட்சி நிவாரணம் வழங்க பாஜக வலியுறுத்தல்

கரூர் மாவட்டம், கடவூர் ஒன்றியத்துக்குள்பட்ட 20 ஊராட்சிகளில் உள்ள விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவி வழங்க வேண்டும் என்பது என பாஜக வலியுறுத்தியுள்ளது.

கடவூர் ஒன்றிய பாஜக செயற்குழு கூட்டம் அண்மையில் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு ஒன்றியத் தலைவர் அண்ணாவி தலைமை வகித்தார். மாவட்ட பொதுச் செயலர் கைலாசம் முன்னிலை வகித்தார்.

கோட்ட அமைப்புச் செயலர் பெரியசாமி, மாவட்டத் தலைவர் கே. சிவசாமி, துணைத் தலைவர் நகுலன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் தரகம்பட்டியில் பாரத ஸ்டேட் வங்கியின் கிளை அமைக்க வேண்டும். காணியாளம்பட்டியில் உள்ள அரசு பாலிடெக்னிக் அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்லவேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 100 சத தேர்ச்சிப் பெற்ற தரகம்பட்டி மாதிரி மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை பாராட்டியும், இடையப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும். கடவூர் ஒன்றியத்துக்குள்பட்ட 20 ஊராட்சிகளில் உள்ள விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட எஸ்.சி. அணித் தலைவர் ராமலிங்கம், மாவட்ட இளைஞர் அணி பொதுச் செயலர் ரெத்தினவேல், மற்றும் செயற்குழு உறுப்பினர் ஜெயபால், மாணிக்கம், கோதாண்டராமன், பொன்ராஜ், சோனாசேகர், தங்கபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக ஒன்றியச் செயலர் முருகன் வரவேற்றார். ஒன்றிய பொதுச் செயலர் சதீஸ்குமார் நன்றி கூறினார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 18.25 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 18.25 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 21 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## வறட்சி நிவாரண குடிநீர் பணிகளை ஒரு வார காலத்துக்குள் நிறைவேற்ற வேண்டும் அமைச்சர் கே.ஏ. ஜெயபால் அறிவுறுத்தல்

நாகை மாவட்டத்தில் 2012- 13-ம் ஆண்டுக்கான வறட்சி நிவாரணப் பணிகள் அனைத்தும் வரும் ஒரு வார காலத்துக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றார் மாநில மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால்.

நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற, குடிநீர் வடிகால் வாரிய, மின்சார வாரிய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பேசியது :

நாகை மாவட்டத்தில் வறட்சியை சமாளிக்கும் வகையில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் கைப்பம்புகள், பைப் லைன் விரிவாக்கம், ஷேலோ வெல் பம்பு மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல் என 2,567 பணிகள் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாகை நகராட்சியில் 587 கைப்பம்புகள் அமைக்கப்பட்டு, 13 திறந்தவெளி கிணறுகள் தூர்வாரப்பட்டுள்ளன. மயிலாடுதுறை நகராட்சியில் 254 கைப்பம்புகளும், சீர்காழி நகராட்சியில் 174 கைப்பம்புகள் மற்றும் 23 மின் விசைப் பம்புகளும், வேதாரண்யம் நகராட்சியில் 456 கைப்பம்புகள் மற்றும் 34 மின் விசைப் பம்புகளும், பேரூராட்சிகள் மூலம் 792 கைப்பும்கள் மற்றும் 49 சிறு மின் விசைப்பம்புகளும் அமைக்கப்பட்டு, குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

கீழ்வேளூர் வட்டத்துக்குள்பட்ட ஓடாச்சேரி- குருமனாங்குடியில் ரூ. 1.5 கோடி மதிப்பில் 1,000 அடி ஆழத்தில் போர்வெல் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. நாகை மாவட்டத்தில் 8 பேரூராட்சிகளிலும் ரூ. 1.10 கோடி மதிப்பில் 2013 வறட்சி நிவாரணத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மாவட்டத்தில் வறட்சியை சமாளிக்கும் வகையில் திட்டமிடப்பட்ட அனைத்து குடிநீர் பணிகளும் ஒரு வார காலத்துக்குள் விரைவாக முடிக்கப்பட வேண்டும். குடிநீர் ஆதாரங்களை முறையாகப் பராமரித்து, குடிநீர் செல்லும் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டால் குடிநீர் விணாகாமல் உடனடியாக சரி செய்திட வேண்டும் என்றார் அமைச்சர் கே.ஏ. ஜெயபால்.

மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தலைமை வகித்தார்.

கீழ்வேளூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் நாகை மாலி, மாவட்ட வருவாய் அலுவலர் மு. ஆசியா மரியம், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஏ.கே. சந்திரசேகரன், பொதுப் பணித் துறை செயற்பொறியாளர்கள் பக்தவச்சலம், பி. ரவிச்சந்திரன், மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் ப. சிவக்குமார், குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளர் ரகுநாத் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## கிலோ ரூ. 20 திட்டத்தில் 42,083 கிலோ அரிசி விற்பனை

திருவாரூர் மாவட்டத்தில் கிலோ அரிசி ரூ. 20 திட்டத்தில் இதுவரை 42,083 கிலோ அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் இத்திட்டத்தின் மூலம் திருவாரூரில் காகிதக்காரத் தெரு, பேருந்து நிலையம், நன்னிலம், பேரளம், குடவாசல், மன்னார்குடி மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகியப் பகுதிகளில் கூட்டுறவு விற்பனை வாளகங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை 42,083 கிலோ அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த அரிசி வாங்க குடும்ப அட்டை எதுவும் தேவையில் லை. மக்கள் தங்களுக்குத் தேவையான தரமான அரிசியான புழுங்கல் மற்றும் பச்சரிசியை வாங்கிப் பயன்பெறலாம்.

## விவசாயிகள் கோடை உழவு செய்து பயன்பெற வேண்டுகோள்

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது பெய்துள்ள கோடை மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்து பயன்பெறுங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கோடை உழவு செய்த நிலத்தில் மழைநீர் நிலத்தின் அடியில் சென்று சேர்கிறது. மேல் மண் கலைத்து விடுவதால் நிலத்தடியில் சேமிக்கப்படும் நீர் ஆவியாவது மற்றும் மண்ணில் வெடிப்பு ஏற்படுவது தடுக்கப்படுகிறது. இதனால் மண்ணில் முன் பயிர்க் காலத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள அடி ஈரம் ஆவியாகாமல் முழுமையாகப் பாதுகாக்கப்படும்.

கோடை உழவு செய்த நிலத்தில் மழை நீர் வேகமாக உறிஞ்சப்படுகிறது. இதன் ஈரம் உறிஞ்சும் வேகம் மணிக்கு 6 முதல் 8 சென்டி மீட்டர் வரை உயருக்கிறது. உழவு செய்யும் போது மேல் மண்புரட்டப்படுவதால் மண்ணிலுள்ள சத்துக் கள் இயற்கையாகவே மாறுபட்டு தட்ப வெட்ப

நிலைமைகளால் பின்னால் சாகுபடி செய்யும் பயிர்களுக்கு எளிதாக கிடைக்கும் வகையில் மாற்றப்படுகிறது.

மழையால் ஏற்படும் மண் அரிப்பு தடுக்கப்படுகிறது. மண் எப்போதும் புழுதியாக இருப்பதோடு விதைப்பு செய்ய ஏதுவாக அமைகிறது. கோடை உழவு செய்தால் களைகளின் இனவிருத்தி குறைக்கப்பட்டு களை எடுக்கும் செலவைக் குறைப்ப தோடு நல்ல மகசூல் கிடைக்கவும் ஏதுவாகிறது. கோடை உழவால் மண் ஈரம் சேமித்து வைக்கப்படுதவடன் பயிர் விளைச்சலும் பெருக வாய்ப்பு ஏற்படுகிறது. ஆண்டு தோறும் பெய்யும் கோடை மழையின் போது உழவு செய்ய வேண்டும்.

கோடை உழவு செய்வதால் மண்ணின் அடிப்பகுதியில் உள்ள ஈரம் காக்கப்படுகிறது. களைகளைக் கட்டுப்படுத்துவடன் மண்ணுக்கு நல்ல காற்றோட்டம் ஏற்படுகிறது. மண்ணின் கீழ் உள்ள பூஞ்னங்கள், பூச்சி வெளிக் கொண்டுவரப்பட்டு அழிக்கப்படுகிறது. பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் மண்ணில் சேமித்து வைக்கப்படுகிறது. சாகுபடிக்கு முன்பாகவே நிலத்தை தயார் செய்ய ஏதுவாகிறது.

நெற் பயிர் சாகுபடிக்குத் தேவையான நீர்த்தேவை 20 சதவீத அளவுக்கு குறைக்கப்படுகிறது. கடினமான மண் இணக்கம் பெருவதால் வேர் வளர்சிக்கு உதவுகிறது. நன்றாக ஈரப்படுத்தப்பட்ட மண்ணில் இருந்து வடியக் கூடிய அவ்வளவு நீரும் வடிந்த பின்னர் துளைகளின் வழியே தங்கி நிற்கும் நீர் தான் நுண்புழை நீர். இந்த நுண்புழை நீரில் பெரும்ப பகுதி பயிரு க்கு கிடைக்கும். கோடை உழவு செய்வதால் நுண்புழை நீர் அதிகப்படுத்தப்படுகிறது. கோடை உழவு செய்வதன் மூலம் நீரையும் சேமித்து மண்ணையும் பாதுகாக்கலாம்.

எனவே விவசாயிகள் அனைவரும் தற்போது பெய்யும் மழையினை பயன்படுத்தி கோடை உழவு செய்து பயன்பெறு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 5.60 அடியாக உயர்வு

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 5.60 அடியாக உயர்ந்துள்ளது. பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 923 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 573 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது. இதன் மூலம் அணையின் நீர்மட்டம் மேலும் உயருவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக பொதுப் பணித் துறைப் பொறியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை விட்டுவிட்டு பெய்து வருகிறது. அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சனிக்கிழமை இரவு நல்ல மழை பெய்தது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தற்போது பேச்சிப்பாறையில் 16.60 அடி தண்ணீர் உள்ளது. இங்கு 44 மி.மீ. மழை பெய்துள்ளது. 923 கன அடி தண்ணீர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. இதுபோல் பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 28.70 அடியாக உயர்ந்துள்ளது.

சனிக்கிழமை நீர்மட்டம் 23.10 அடியாக இருந்தது. 5.60 அடி தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது. இங்கு 56.6 மி.மீ. மழை பெய்துள்ளது. சிற்றாறு-1 அணையில் 65.6 மி.மீ. மழையும், சிற்றாறு-2 அணையில் 58.4 மி.மீ. மழையும பதிவாகி உள்ளது.

இந்த மாவட்டத்தில் நாகர்கோவிலில் 20 மி.மீ. மழையும், பூதப்பாண்டியில் 26 மி.மீ., சுருளோடு 43 மி.மீ., கன்னிமார் 18.4 மி.மீ., ஆரல்வாய்மொழி 4.4. மி.மீ, பாலமோர் 63.7 மி.மீ., மயிலாடி 9.2 மி.மீ., இரணியல் 16.4 மி.மீ., ஆணைக்கிடங்கு 14 மி.மீ., குளச்சல் 16.6 மி.மீ., குருந்தன்கோடு 19.2 மி.மீ., திருவட்டார் 17.5 மி.மீ., புத்தன் அணை 56.4 மி.மீ., திற்பரப்பு 59 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

இந்த மாவட்டத்தில் தொடர்ந்து குளிர்ந்த காற்று வீசி வருகிறது. அவ்வப்போது லேசான மழை பெய்து வருகிறது. மேற்கு கடலோரப் பகுதியில் தொடர்ந்து கடல் சீற்றம் காணப்படுகிறது.

கடல் சீற்றம் காரணமாக கடலில் காணாமல்போன 5 மீனவர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## அணைகள் நீர்மட்டம் கணிசமாக உயர்வு: சாகுபடி பணிகள் தொடக்கம்

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளின் நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 16 அடி உயர்ந்துள்ளது. பாபநாசம், கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில் மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருகிறது. சனிக்கிழமை மழை நீடித்ததை அடுத்து அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழை அளவு (மி.மீட்டரில்): பாபநாசம் அணை 27, பாபநாசம் கீழ்அணை 11, சேர்வலாறு அணை 9, மணிமுத்தாறு அணை 23.8, கடனாநதி அணை 6, ராமநதி அணை 4, அம்பாசமுத்திரம் 13.2, சேரன்மகாதேவி 6.

பாபநாசம் அணைக்கு சனிக்கிழமை 260 கனஅடி நீர்வரத்து இருந்தது. இது ஞாயிற்றுக்கிழமை 3609.60 கனஅடியாக அதிகரித்தது. இதேபோல் சேர்வலாறு அணையின் நீர்வரத்து விநாடிக்கு சுமார் 5,000 கனஅடியாக இருந்தது. கடனாநதி அணைக்கு விநாடிக்கு 160 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 106 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

நீர்வரத்து அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து, அணைகளின் நீர்மட்டம் உயரத் தொடங்கியுள்ளது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 5.45 அடி உயர்ந்து 58.80 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 16 அடி உயர்ந்து 81.04 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 38 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 6.50 அடி உயர்ந்து 48 அடியாகவும் இருந்தது.

மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 72.04 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 90 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து தாமிரவருணி ஆற்றில் 200 கனஅடியும், பெருங்கால் மதகில் 75 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மின்வாரிய பராமரிப்புப் பணிக்காக பாபநாசம், சேர்வலாறு அணைகள் மூடப்பட்டுள்ளன.

சாகுபடி பணிகள் தொடக்கம்: கடந்த 2012-ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழை பொய்த்த காரணத்தால் கார்பருவம் சாகுபடி செய்யப்படவில்லை. நிகழ்பருவத்தில் பருவமழை சரியான சமயத்தில் தொடங்கி பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடி பணிகளைத் தொடங்கியுள்ளனர். அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி பகுதியில் நாற்று பாவும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கார் சாகுபடிக்கு பாபநாசம் அணையிலிருந்து இம்மாதம் 15-ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படக்கூடும் என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சேமிப்புக் கிடங்கில் தீ: ரூ.7 கோடி மதிப்பிலான மஞ்சள், கொப்பரை சேதம்**



காங்கயம் அருகே தனியார் சேமிப்புக் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் இருப்பு வைக்கப்பட்டிருந்த ரூ.7 கோடி மதிப்பிலான மஞ்சள், கொப்பரை தீயில் எரிந்து சேதமடைந்தன.

திருப்பூர் மாவட்டம், காங்கயத்தில் ஏராளமான தேங்காய் உலர் களங்கள் உள்ளன. இங்கு காயவைக்கப்படும் உலர் தேங்காயை இருப்பு வைப்பதற்கு ஏராளமான தனியார் சேமிப்புக் கிடங்குகள் உள்ளன.

காங்கயத்தையடுத்த வீரணம்பாளையம் கரூர் சாலையில் சிவக்குமார் என்பவருக்கு சொந்தமான விளைப்பொருள் சேமிப்புக் கிடங்கு உள்ளது. இந்தச் சேமிப்பை கிடங்கை மும்பையைச் சேர்ந்த ஒரு நிறுவனத்துக்கு சொந்தமான 600 டன் தேங்காய் உலர் கொப்பரை பருப்புகளும், 400 டன் மஞ்சளும் இருப்பு வைக்கப்பட்டிருந்தது. இதற்கு அருகே உள்ள மற்றொரு கிடங்கில் நெல், அரிசி இருப்பு வைக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் கொப்பரை இருப்பு வைக்கப்பட்டிருந்த கிடங்கில் திடீரென தீப்பற்றி எரியத் துவங்கியது. எண்ணெய் எடுக்கும் பக்குவத்தில் இருந்த கொப்பரை தேங்காய்களால் தீ மளமளவென பரவி, கொழுந்துவிட்டு எரிந்தது. 100 அடி நீளம் கொண்ட இந்தக் கட்டடம் முழுவதும் ஒரே நேரத்தில் எரியத் துவங்கியதால், சுவர், மேற்கூரைகள் வெடித்து சிதறின.

காங்கயம், தாராபுரம், வெள்ளக்கோவில் பகுதிகளைச் சேர்ந்த தீயணைப்பு வீரர்கள் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர். அருகே இருந்த நெல் இருப்பு வைக்கப்பட்டிருந்த கிடங்கில் தீ பரவாமல் இருக்க முதல் கட்ட நடவடிக்கை மேற்கொண்டனர்.

தீ அதிக அளவில் பற்றி எரிந்து கொண்டிருந்ததால், தீயணைப்பு வீரர்களால் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, பொக்லைன் இயந்திரம் வரவழைக்கப்பட்டு, கிடங்கின் சுவர்கள் தகர்க்கப்பட்ட பின்னரே தீயை அணைக்கும் முயற்சியில் ஓரளவுக்கு வெற்றி பெற முடிந்தது. தொடர்ந்து 10 மணி நேரம் போராடி, தீயைக் கட்டுப்படுத்தினர்.

தீ விபத்தால் அப் பகுதியே புகை மண்டலமாகக் காட்சியளித்தது. தீயணைக்கும் வாகனங்களுக்கு தேவையான தண்ணீர் லாரிகள் மூலம் எடுத்து வரப்பட்டது. இந்தத் தீ விபத்தில் சுமார் ரூ.7 கோடி மதிப்புள்ள கொப்பரை, மஞ்சள் எரிந்து சாம்பலானது.

இதுகுறித்து காங்கயம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

## இன்றும் மழை பெய்ய வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுவையில் மழையோ இடியுடன் கூடிய மழையோ திங்கள்கிழமை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாகக் காணப்படும். சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். தரைக்காற்று பலமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் வால்பாறையில் 40 மி.மீ. மழை பெய்துள்ளது. பாபநாசம், ராதாபுரத்தில் 30 மி.மீ. மழையும், மணிமுத்தாறு, தேவலா, செங்கோட்டை, முடுக்கூரில் 20 மி.மீ. மழையும் பெய்துள்ளது. அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி, கந்தர்வக்கோட்டை, பெரியாறு ஆகிய பகுதிகளில் 10 மி.மீ. மழை பெய்துள்ளது.

நாகப்பட்டினத்தில் 102 டிகிரி வெயில்: இந்த நிலையில், தமிழகத்தில் அதிகபட்சமாக நாகப்பட்டினத்தில் ஞாயிற்றுக்கிழமை 102 டிகிரி வெயில் பதிவானது.

மற்ற இடங்களில் பதிவான வெயில் அளவு (டிகிரி பாரன்ஹீட்டில்): சென்னை நுங்கம்பாக்கம், மதுரை - 101, தூத்துக்குடி - 100, சென்னை மீனம்பாக்கம், புதுச்சேரி, காரைக்கால் - 99, திருச்சி - 98, வேலூர் - 97, கடலூர், பாளையங்கோட்டை, கரூர் பரமத்தி - 96, சேலம் - 95, தருமபுரி - 92, கோவை - 89.

## மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் மழை: சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 16 அடி உயர்வு



மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளின் நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 16 அடி உயர்ந்துள்ளது. பாபநாசம், கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

தென்மேற்குப் பருவமழை தொடங்கியுள்ள நிலையில் மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருகிறது. சனிக்கிழமை மழை நீடித்ததை அடுத்து அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழை அளவு (மி.மீட்டரில்): பாபநாசம் அணை 27, பாபநாசம் கீழ்அணை 11, சேர்வலாறு அணை 9, மணிமுத்தாறு அணை 23.8, கடனாநதி அணை 6, ராமநதி அணை 4, அம்பாசமுத்திரம் 13.2, சேரன்மகாதேவி 6.

பாபநாசம் அணைக்கு சனிக்கிழமை 260 கனஅடி நீர்வரத்து இருந்தது. இது ஞாயிற்றுக்கிழமை 3609.60 கனஅடியாக அதிகரித்தது. இதேபோல் சேர்வலாறு அணையின் நீர்வரத்து விநாடிக்கு சுமார் 5,000 கனஅடியாக இருந்தது. கடனாநதி அணைக்கு விநாடிக்கு 160 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 106 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

நீர்வரத்து அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து, அணைகளின் நீர்மட்டம் உயரத் தொடங்கியுள்ளது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 5.45 அடி உயர்ந்து, 58.80 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 16 அடி உயர்ந்து 81.04 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 5 அடி உயர்ந்து 38 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 6.50 அடி உயர்ந்து 48 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 72.04 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 90 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து தாமிரவருணி ஆற்றில் 200 கனஅடியும், பெருங்கால் மதகில் 75 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மின்வாரிய பராமரிப்புப் பணிக்காக பாபநாசம், சேர்வலாறு அணைகள் மூடப்பட்டுள்ளன.

சாகுபடிப் பணிகள் தொடக்கம்: கடந்த 2012-ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழை பொய்த்த காரணத்தால் கார்பருவ சாகுபடி செய்யப்படவில்லை. நிகழ்பருவத்தில் பருவமழை சரியான சமயத்தில் தொடங்கி பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடி பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி பகுதியில் நாற்று பாவும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கார் சாகுபடிக்கு பாபநாசம் அணையிலிருந்து இம்மாதம் 15-ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படக்கூடும் என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

குமரியில்... கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 5.60 அடியாக உயர்ந்துள்ளது. பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 923 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 573 கன அடி தண்ணீரும் வந்து

கொண்டிருக்கிறது. இதன் மூலம் அணைகளின் நீர்மட்டம் மேலும் உயருவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக பொதுப் பணித் துறைப் பொறியாளர்கள் தெரிவித்தனர்.

இந்த மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை விட்டுவிட்டு பெய்து வருகிறது. அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சனிக்கிழமை இரவு நல்ல மழை பெய்தது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தற்போது பேச்சிப்பாறையில் 16.60 அடி தண்ணீர் உள்ளது. இங்கு 44 மி.மீ. மழை பெய்துள்ளது. 923 கன அடி தண்ணீர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. இதுபோல் பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 28.70 அடியாக உயர்ந்துள்ளது. இங்கு 56.6 மி.மீ. மழை பெய்துள்ளது. சிற்றாறு-1 அணையில் 65.6 மி.மீ. மழையும், சிற்றாறு-2 அணையில் 58.4 மி.மீ. மழையும பதிவாகி உள்ளது.

இந்த மாவட்டத்தில் தொடர்ந்து குளிர்ந்த காற்று வீசி வருகிறது. அவ்வப்போது லேசான மழை பெய்து வருகிறது. மேற்கு கடலோரப் பகுதியில் தொடர்ந்து கடல் சீற்றம் காணப்படுகிறது.

இன்றைய வேளாண் செய்திகள்

10.06.2013 A.M

## மானாவாரி நிலக்கடலை விதைப்பு பணி தீவிரம்: பருவமழை கை கொடுக்குமா?

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதியில், பரவலாக பெய்த மழையை நம்பி, மானாவாரி நிலக்கடலை, சோளம், தட்டப்பயிர், பச்சைப்பயிர் விதைப்பு பணியில், விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி பகுதியில், சில ஆண்டுகளாக, போதிய மழை இல்லாததால், ஏரி, குளம், குட்டைகள் வறண்டு, முற்புதர் மண்டி கிடக்கின்றன. 100 அடி ஆழம் கொண்ட விவசாய கிணறுகளும் வறண்டதால், குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. நடப்பாண்டில், கடும் வறட்சி வாட்டி எடுத்ததால், தென்னை, மா, வாழை, அரளி, குண்டுமல்லி, கொய்யா உள்ளிட்டவை தண்ணீர் இன்றி மடிந்தன.

இந்நிலையில், பனமரத்துப்பட்டி பகுதியில், சில நாட்களாக, பரவலாக மழை பெய்து வருகிறது. மழையை பயன்படுத்தி, மானாவாரி விதைப்பு பணியில், விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். மழையால் குளிர்ந்த வயலை, உழவு செய்து, நிலக்கடலை, சோளம், தட்டப்பயிர், பச்சைப்பயிர், துவரை உள்ளிட்டவை விதைக்கின்றனர். அதிக அளவில், மானாவாரி நிலக்கடலை பயிர் செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மூக்குத்திபாளையம், பசுவநத்தம்பட்டி, சந்தியூர், அம்மாபாளையம், பள்ளித்தெருப்பட்டி, பாரப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில், மானாவாரி நிலக்கடலை விதைப்பு பணி தீவிரமடைந்துள்ளது. பெரமனூர், களரம்பட்டி, நத்தமேடு உள்ளிட்ட கிராமங்களில், மானாவாரி நிலக்கடலை பயிர் செய்ய, கூடுதல் மழையை எதிர்பார்த்து, விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

பசுவநத்தம்பட்டி விவசாயிகள் கூறியதாவது:

ஆண்டுதோறும் வழக்கமாக, சித்திரை மாதம் பருவ மழை பெய்யும். இந்த ஆண்டு காலம் கடந்து, வைகாசி மாத கடைசியில், குறைந்த அளவில் மழை பெய்தது. இந்த மழையை நம்பி, மானாவாரி நிலக்கடலை விதைத்து வருகிறோம். ஒரு கிலோ விதை நிலக்கடலை, 60 ரூபாய் வீதம், ஏக்கருக்கு, 50 கிலோ வாங்கினோம்.மாடு மூலம் உழவு செய்ய நாள் ஒன்றுக்கு கூலி, 600 ரூபாய் என, மூன்று நாட்கள் உழவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு மானாவாரி நிலக்கடலை பயிரிட, 7,000 ரூபாய் வரை செலவாகிறது. தொடர்ந்து மழை பெய்தால், 90 நாட்களில் நிலக்கடலை அறுவடை

செய்யலாம். மழை பெய்யாமல் ஏமாற்றினால், பெரும் நஷ்டம் ஏற்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## பருவ மழை முன்னேற்பாடு குறித்து ஆலோசனை

தர்மபுரி: தென்மேற்கு பருவமழையையொட்டி, மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம், கலெக்டர் லில்லி தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் அவர் பேசியதாவது:

தென்மேற்கு பருவமழை துவங்க உள்ளதை அடுத்து மாவட்டத்தில் உள்ள அனைத்து அலுவலர்களும் தங்கள் துறை சம்பந்தமாக பேரிடர் மேலாண்மை திட்டம் குறித்தும், துறை அலுவலர்களின் முகவரி மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி, மொபைல் எண்கள் உள்ளிட்டவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பருவமழையின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து கோட்ட, வட்ட, வட்டார அளவில் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் நடத்தப்பட வேண்டும்.

பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் வகையில் இயற்கை இடர்பாடுகளை உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்திற்கும், அரசிற்கும் தெரியப்படுத்தும் வகையில் கலெக்டர் அலுலகத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாட்டு அறைக்கு நாள் முழுவதும் கட்டணமில்லா தொலைபேசி எண், 1077 பொதுமக்களும், அலுவலர்களும் தொடர்பு கொண்டு உரிய விவரங்களை தெரிவிக்கலாம்.

பருவமழை காலங்களில் ஏற்படும் நிகழ்வுகளிலிருந்து பாதுகாத்து கொள்ளும் பொருட்டு முன்னெச்சரிக்கை மாதிரி ஒத்திகை பொதுமக்கள் கூடும் இடங்களில் நடத்தி காட்டுதல், பருவமழை காலங்களின் போது அதிக பாதிப்பு ஏற்படக் கூடிய இடங்கள், நிவாரண மையங்கள், தானாக முன்வந்து உதவக்கூடிய அமைப்புகள் மற்றும் வருவாய்துறையில் வட்டாட்சியர் முதல் வி.ஏ.ஓ., வரை தொடர்பு எண்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய கையேட்டினை தயார் செய்து வைக்க வேண்டும்.

மழைமானிகள் நல்ல முறையில் செயல்படுகிறதா என தணிக்கை செய்து கண்காணித்திட வேண்டும். பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர் மாவட்டத்திலுள்ள புயல் தடுப்பு மையம், பள்ளி கட்டிடங்கள், சமுதாய கூடங்கள் மற்றும் தனியார் திருமண மண்டபங்களை கண்டறிந்து அவைகளில் பருவமழை காலங்களில் பாதிக்கப்பட்டவர்களை தங்க வைக்க வசதியாக உள்ளனவா என ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

தாழ்வான இடத்தில் வசிப்பவர்களை மேடான பகுதியில் தங்க வைக்க ஏற்பாடு செய்தல், வெள்ளம் வரும் இடங்களில் பயன்படுத்த தேவையான மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைக்க வேண்டும்.

பருவமழை பெய்ய தொடங்குவதற்கு முன்பாகவே அனைத்து நீர் நிலைகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும், மழை காலங்களில் போது சூறாவளி காற்றினால் சாலையோரங்களில் உள்ள மரங்கள், மின்கம்பங்கள் கீழே விழ நேர்ந்தால் அவற்றை உடனுக்குடன் அகற்றிட தேவையான இயந்திரங்களை தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பருவமழை காலங்களில் வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படும் கிராமங்களுக்கு அத்தியாவசிய உணவு பொருட்களை வழங்குவதற்கு தேவையான அளவு உணவு பொருட்களை இருப்பு வைத்தல் ஆகிய பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களுக்கு ஏற்படும் நோய் பாதிப்புகளை எதிர்கொள்ள தேவையான மருந்துகள் மற்றும் பிற மருத்துவ உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பருவமழை காலங்களில் தினந்தோறும் ஏற்படும் பயிர் சேதம் மற்றும் பாதிப்பு ஆகியவற்றின் விவரங்களை உடனுக்குடன் ஆய்வு செய்து தகவல் தர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கலெக்டர் நேர்முக உதவியார் (பொது) ரஹமத்துல்லாகான், ஆர்.டி.ஓ., மேனகா, சந்திரசேகரன், கூட்டுறவு சங்க இணைபதிவாளர் ராமதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சொட்டுநீர் பாசனம் அமைக்கமானியம்: உதவி இயக்குனர்

ராசிபுரம்: "சொட்டு நீர் பாசனம் அமைக்க, 100 சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளது' என, ராசிபுரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.இது குறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:தோட்டக்கலை பயிர்களான, மஞ்சள், வாழை, மரவள்ளி, வெங்காயம் மற்றும் காய்கறிளை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. அதில், ஐந்து ஏக்கர் வரை விவசாயம் செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு, மானியம் வழங்கப்பட உள்ளது.

இந்த சொட்டு நீர் மானியம் பெற விவசாயிகள், தாசில்தாரிடமிருந்து பெறபட்ட சிறு, குறு விவசாயிக்கான சான்று மற்றும் பட்டா, சிட்டா அசல் மற்றும் நகல் அளிக்க வேண்டும். மேலும், வி.ஏ.ஓ., விடமிருந்து சாகுபடி செய்யப்பட்ட பயிர், பரப்பு, கிணறு விபரம், அதில் பொருத்தப்பட்ட மின் மோட்டாரின் ஹெச்.பி., மற்றும் மின் இணைப்பு எண் அடங்கிய வரைபடம் வழங்க

வேண்டும்.அதுபோல், விவசாயி ரேஷன் கார்டு, குத்தகைதாரராக இருந்தால் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்து ஆண்டுக்கான குத்தகை ஒப்பந்த பத்திரம், வாரிசுகள் அனுபவத்தில் நிலம் இருந்தால், அனுபவ சான்று ஆகியவற்றுடன் ஐந்து பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ இணைத்து, தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவகலத்தில் விண்ணப்பம் வழங்க வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### செம்மை கரும்பு சாகுபடி குறித்து முண்டியம்பாக்கத்தில் பயிற்சி

விக்கிரவாண்டி : முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில் செம்மை கரும்பு சாகுபடி குறித்த பயிற்சிமுகாம் நடந்தது.

ஆலை வளாகத்தில் நடந்த பயிற்சி முகாமிற்கு சர்க்கரை ஆலை மேலாளர் (கரும்பு) ராஜேந்திரன் தலைமை தாங்கினார். துணை மேலா ளர் (விரிவாக்கம்) லட்சுமணன் முன்னிலை வகித் தார். கரும்பு அலுவலர் சக்திவேல் வரவேற்றார்.

செம்மை கரும்பு சாகுபடியில் மகசூல் உயரவும், சொட்டு நீர் பாசனம் அமைப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்த பயிற்சியை விவசாயிகளுக்கு ஜெயபால், துணை வேளாண்மை இயக்குனர் அன்பழகன் , தலைமை பொறியாளர் முரளி சங்கர் பயிற்சியளித்து சான்றிதழ்களை வழங்கினர். பயிற்சியில் கரும்பில் புதிய ரகங்கள், செதில் பரு நாற்றங்கால், பூச்சி நோய் கட்டுப்பாடு, நவீன கரும்பு சாகுபடி இயந்திரங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. பயிற்சியில் முன்னோடி விவசாயிகள் பூவரசங்குப்பம் ராமு, கனகராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர் .

கரும்பு அலுவலர் சரவண குமார் நன்றி கூறினார்.

### பண்ணை குட்டை அமைக்க விவசாயிகளிடையே ஆர்வம்...இல்லை 56 ஊராட்சிகளில் ஒருவர்கூட செயல்படுத்த முன்வரவில்லை

திருவள்ளூர்:வறட்சி காலத்தில், கூடுதல் வருமானம் பெற, பண்ணைக் குட்டை அமைக்க, அரசு மானியம் வழங்கும் என, அறிவித்தும், இத்திட்டத்தை செயல்படுத்த விவசாயிகளிடையே ஆர்வம் இல்லை.இது தொடர்பாக, மாவட்டத்தில், இதுவரை, 56 ஊராட்சிகளில் நேரடி கலந்தாய்வு நடத்தியும், ஒரு விவசாயிகூட, இத்திட்டத்தை செயல்படுத்த முன்வரவில்லை.தமிழகத்தில், வடகிழக்கு பருவ மழை பொய்த்ததன் காரணமாக, விவசாயிகள் போதிய தண்ணீரின்றி பயிர் செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர். இது தவிர, மணல் திருட்டு காரணமாக நிலத்தடி நீர் இருப்பு இல்லாமல் போய் விடுகிறது.தண்ணீர் இல்லாததால், விவசாயிகள் சிலர் பயிர் செய்வதை நிறுத்தி விட்டனர். சிலர் தங்கள் விளை நிலங்களை, ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு விற்று

வருகின்றனர்.பயன்கள்இந்நிலையில், கோடையில் விவசாயிகள் தண்ணீரின்றி கஷ்டப்படுவதை தவிர்ப்பதற்காக, விவசாயிகளுக்கு, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ், மாவட்டத்தில், 2.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 536 பண்ணைக் குட்டை அமைக்க திட்டமிடப்பட்டது. இதற்கான அறிவிப்பு, இந்தாண்டு, ஏப்.18ம் தேதி வெளியிடப்பட்டது.இந்த பண்ணைக் குட்டை அமைப்பதன் மூலம், அதில் தண்ணீரை சேமித்து வைக்க முடியும். அந்த தண்ணீரை கொண்டு, விவசாயிகள் தங்களின் பயிர்களை நீர்வற்றிய இக்கட்டான காலங்களில் காத்திட முடியும்.அத்துடன், இந்த பண்ணைக் குட்டையில், மீன் வளர்ப்பதன் மூலம், விவசாயிகள் கூடுதல் வருவாயை ஈட்டவும் வாய்ப்புள்ளது.மானியம்விவசாயிகள் தங்கள் விளை நிலத்தில் குறைந்தபட்சம், அரை ஏக்கர் பரப்பளவுக்கு குட்டை அமைக்க வேண்டும். ஐந்தடி ஆழமும், அதன் கரைகள் ஒன்றரை மீட்டர் அகலம் கொண்டதாக இருக்க வேண்டும். மேலும், குட்டையில் மீன்கள் வளர்வதற்கு வசதியாக, ஒன்றரை மீட்டர் அளவுக்கு தண்ணீர் இருத்தல் வேண்டும்.இக்குளத்தில் மீன் வளர்க்க விவசாயிகளுக்கு மீன்வளத் துறை மூலம், 2,500 மீன் குஞ்சுகள் வழங்கப்படும். ஒரு மீன் குஞ்சு, 2 ரூபாய் என்ற விலையில் வழங்கப்படும். அதற்கான தீவனம், கிலோ 25 ரூபாய் என்ற விலையில், 1,500 கிலோ வழங்கப்படும். மேலும், இயற்கை உரங்களுக்கு 1,500 ரூபாயும், மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்கு, 2,000 ரூபாயும் செலவாகும்.இதற்கான தொகையை, விவசாயிகள் முதலில் தங்களது சொந்த பணத்தில் இருந்து செலவழிக்க வேண்டும்.பின்னர் இதுகுறித்து, விவசாயிகள் மீன்வளத் துறை அதிகாரிகளிடம் சென்று தெரிவித்தால், அவர்கள் நேரில் வந்து ஆய்வுசெய்து, குறிப்பிட்ட விவசாயி செய்த மொத்த செலவில், 50 சதவீதத் தொகையை மானியமாக வழங்குவர்.விவசாய நிலங்களில் அமைக்கப்படும் பண்ணைக் குட்டைகளுக்கு, மீன்வளத் துறை மூலம் மீ ன் வளர்க்க பயிற்சியளிக்கப்படும். ஓராண்டிற்கு தேவையான இடுபொருள்கள், 50 சதவீத மானியத்துடன் வழங்கப்படும்.ஆர்வமில்லைஇத்திட்டத்திற்கு, விவசாயிகளிடையே போதிய வரவேற்பு இல்லை. இதுதொடர்பாக, 56 ஊராட்சிகளில் நேரடி கலந்தாய்வு நடத்தப்பட்டது. இதில், ஒரு விவசாயி கூட இத்திட்டத்தை செயல்படுத்த முன்வரவில்லை.இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத விவசாயிகள் சிலர் கூறுகையில், "இத்திட்டத்தை இதுவரை எந்த விவசாயியும் செயல்படுத்தி பார்க்கவில்லை. இந்த திட்டத்தில் எவ்வளவு பலன் கிடைக்கும் என, தெரியவில்லை. அதனால், இத்திட்டத்தை செயல்படுத்துவதில் எங்களுக்கு தயக்கம் உள்ளது' என்றனர்.இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண் துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், ""பண்ணைக் குட்டை திட்டத்திற்கு, விவசாயிகளிடையே போதிய வரவேற்பு இல்லை என்பது உண்மைதான். எனினும், தொடர்ந்து அவர்களுக்கு

இத்திட்டத்தின் பயன்கள் குறித்து எடுத்துரைத்து, இத்திட்டத்தை செயல்படுத்த அவர்களை ஊக்கப்படுத்துவோம்" என்றார்.

### மாடுகளிடம் இருந்து பயிர்களை காக்க "மீன்வலை'

செய்யூர்:வெடால் கிராமத்தில், வளமான நீர் பாசனம் இருந்தும், மாடுகள் தொல்லையால், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளதாக, அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்து உள்ளனர்.சித்தாமூர் ஒன்றியத்திற்கு உட்பட்டுள்ளது வெடால் கிராமம். இங்கு, 3,000க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். முக்கிய தொழிலாக விவசாயம் உள்ளது. இங்குள்ள வயல்வெளிகளில், நல்ல நீர் வளம் உள்ளதால், இப்பகுதி விவசாயிகள், ஆண்டு தோறும் இரண்டு போகம் பயிரிடுவது வழக்கம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக, மாடுகள் தொல்லையால், ஒரு போகம் மட்டுமே பயிரிடும் நிலை ஏற்பட்டுள்ளது.பாதிப்பு சுற்றுப் பகுதிகளில் இருந்து வரும் ஏராளமான மாடுகள், பயிர்களை மேய்ந்து விடுவதால், 650 ஏக்கர் வரை பயிர் செய்து வந்த விவசாயிகள், தற்போது, 30 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே பயிர் செய்து வருகின்றனர். இதுகுறித்து, விவசாயி வரதன் கூறியதாவது:அருகில் உள்ள கப்பிவாக்கம், நல்லூர், மரக்காணம் ஓடை போன்ற பகுதிகளில் இருந்து வரும் மாடுகள், பயிர்களை மேய்ந்து விடு கின்றன. இதனால், பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. இவ்வாறு, அவர் தெரிவித்தார்.நெல் பயிர் சாகுபடி செய்துள்ள சங்கர் கூறியதாவது:மாடுகள் தொல்லையால், வயல்வெளியை சுற்றி, மீன் வலையை கட்டி வைத்து, பாதுகாக்க வேண்டி உள்ளது. இதற்கு மாவட்ட நிர்வாகம், ஏதேனும் மாற்று ஏற்பாடுகளை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

### ஆலங்குடி பகுதியில் பலத்த சூறைக்காற்று: விவசாய பயிர்கள் சேதம்

ஆலங்குடி: புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அடுத்த வடகாடு பகுதியில் வீசிய சூறைக்காற்றில் வாழை, சோளம் உள்ளிட்ட பயிர்களோடு நூற்றுக்கணக்கான மரங்கள் முறிந்ததால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.வடகாடு மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள மாங்காடு, கீழாத்தூர், கொத்தமங்கலம், கீரமங்கலம், சேந்தன்குடி, நகரம், புள்ளான்விடுதி உள்ளிட்ட கிராமங்களில் கோடை மழை பெய்யாமல் கடும் வெயில் அடித்து வந்ததாலும் மின்பற்றாக்குறையாலும் வாழை, சோளம் உள்ளிட்ட பயிர்களுக்கும் பலா, தென்னை, மா போன்ற மரங்களுக்கும் தண்ணீர் முறையாக பாய்ச்சமுடியாத நிலை ஏற்பட்டதால் இவைகள் வாடி வதங்கியது.

நாள் ஒன்றுக்கு வினியோகிக்கப்பட்ட 3 மணி நேர மும்முனை மின்சாரம் போதாதது என்பதால்,

மணிக்கு 500 ரூபாய் செலவில் வாடகை ஜெனரேட்டர் வைத்து தண்ணீர் இறைத்தும், அதிகமான விலை கொடுத்து இடுபொருள் வாங்கியும் விவசாயம் செய்தனர்.இந்நிலையில், நேற்றுமுன்தினம் மாலை குளிர் காற்று வீசியது. அதைத் தொடர்ந்து லேசாக வீசிய காற்றின் அழுத்தமும் மெல்ல, மெல்ல பலமானது. ஓரு கட்டத்தில் சூறாவளிக்காற்றாக மாறி, நாலாபுறமும் சுழற்றி அடித்ததில் நூற்றுக்கணக்கான ஏக்காரில் பயிரிடப்பட்டிருந்த வாழை, சோளம் மண்ணோடு மடிந்தது. பலா, மா மரங்கள் அடியோடும், கிளைகளும் முறித்து தூக்கி எறியப்பட்டன. தென்னை மரங்ளும் சாய்ந்தது.அப்போது, லேசான மழை பெய்ததால் வறண்ட நிலம் குளிர்ந்தது. மரங்கள் முறிந்து சாலை, மின்கம்பிகளில் சாய்ந்ததால் போக்குவரத்து, மின்விநியோகம் முழுமையாக பாதிக்கப்பட்டது. இதனால் பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். விவசாயிகளுக்கு விளைபொருளுக்கு ஏற்ற விலை இல்லை, இடுபொருள் விலை உயர்வு, ஆள் பற்றாக்குறை உள்ளிட்ட செயற்கையான பிரச்னை ஒருபுறமிருக்க, இதுபோன்ற இயற்கையால் ஏற்பட்ட பிரச்னையால் விவசாயிகள் சோகத்தில் ஆழ்ழ்ந்துள்ளனர். இதுகுறித்து வருவாய்த்துறை, மின்வாரிய, நெடுஞ்சாலைத்துறை பணியாளர்கள் போக்குவரத்து, மின்பாதைகளில் ஏற்பட்டிருந்த பாதிப்புகளை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.""சூறாவளிக்காற்றால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு அரசு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்," என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மண்வளம் காக்க "டெஸ்ட்' உதவி இயக்குனர் அழைப்பு

லாலாப்பேட்டை: "மண்வளம் பற்றி அறிந்து கொள்ள பரிசோதனை செய்ய வேண்டும்' என, கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பயிர் மகசூல் அதிகரிக்கவும், மண்வளத்தை மேம்படுத்தவும், வேளாண்மைத்துறை பரிந்துரைப்படி உரங்கள் இடுவது மிகவும் அவசியமாகும். மண் ஆய்வு செய்து, அதன்படி உரமிடுவதால், உற்பத்தி அதிகரிப்பதுடன், மண் வளம் சீர்கெடாமல் பாதுக்கும்.

மேலும் சோதனை மூலம் தேவையான சமச்சீர் ஊட்ட சத்துக்கள் சிக்கனமாக இடலாம். உரச்செலவினை குறைக்கலாம். பயிருக்கு தேவையான அளவு உரங்களை இடலாம். மண்ணின் கார அமிலத்தன்மையை அறிந்து சரி செய்யலாம். இதற்காக மண்மாதிரிகளை, வயலில் பயிர் இல்லாமல் தரிசாக இருக்கும்போது எடுக்க வேண்டும். வரப்பு ஓரங்கள், எருகுவித்த இடங்கள், வாய்க்கால் ஓரங்கள் மற்றும் மரநிழல் உள்ள இடங்களில் மண் மாதிரிகளை எடுக்க கூடாது. மாதிரி எடுக்கும் இடத்தில் உள்ள இலைகள் புல்பூண்டுகள், சருகுகளை மட்டும் நீக்க வேண்டும்.

"வி' போன்ற வடிவம் வருமாறு வெட்டிய, குழியின் ஓரமாக, மேல் இருந்து கீழாக நெல், கேழ்வரகு, கம்பு, நிலக்கடலை போன்ற பயிர்களுக்கு, 15 செ.மீ., ஆழத்தில் எடுக்க வேண்டும்.
பருத்தி, கரும்பு, வாழை, மரவள்ளி, காய்கறி பயிர்களுக்கு, 22 செமீ ஆழத்திலும், தென்னை, மா, மற்றும் பழத்தோட்ட பயிர்களுக்கு, 30, 60, 90 செமீ ஆழத்தில், மூன்று மாதிரிகள் எடுக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு குறைந்தது, 10 இடங்களில் மண் சேகரித்து, காகிதத்தில் கொட்டி கலந்து மண்ணில் இருக்கும், கல், வேர், தண்டுகள் முதலியவற்றை அப்புறப்படுத்தி, நிழலில் உலர்த்த வேண்டும்
அதை அரைகிலோ இருக்கும்படி துணிபையில் எடுத்து சோதனைக்கு அனுப்ப வேண்டும். விவசாயின் பெயர், விலாசம், சர்வேஎண், பாசனவசதி, பயிரிட்ட முன்பயிர், அடுத்த பயிர் ஆகிய விபரங்களை குறிப்பிட்டு, மண் பரிசோதனை நிலையம், ராயனூர், கரூர் மாவட்டம் என்ற முகவரிக்கு, மண்மாதிரியை அனுப்பவேண்டும்.

## விவசாய நிலத்தில் சொட்டுநீர் பாசனம் 100 சதவீதம் மானியம் வழங்கல்

ஈரோடு: சிறு, குறு விவசாயிகள், இரண்டு ஏக்கர் விளை நிலத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்க, தோட்டக்கலைத்துறையில், 100 சதவீதம் மானியம் வழங்குவதாக அறிவித்துள்ளது.
ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன், எல்.பி.பி., வாய்க்கால் மூலம், 2.5 லட்சம் ஏக்கர் வேளான் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. நெல், மஞ்சள், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் முதல் போகத்திலும், இரண்டாம் போகத்தின் தண்ணீர் இருப்புக்கு ஏற்ப எள், கடலை, மரவள்ளி ஆகியவை பயிரிட்டு வருகின்றனர்.தவிர, ஊடுபயிராக கால்நடை தீவனங்கள், காய்கறிகள், கோகோவை விவசாயிகள் பயிரிடுகின்றனர். கடந்த ஒன்றரை ஆண்டுக்கு மேலாக போதிய மழையின்றி, நீர் நிலைகள் வறண்டன. நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததால், கிணறுகள், ஆழ்குழாய்களில் தண்ணீர் வற்றின.தண்ணீர் பிரச்னையை சமாளிக்கவும், தென்னை மரங்களை பாதுகாத்திட, விவசாயிகள் சொட்டுநீர் பாசனத்தை முறையாக அமைத்தனர். இந்நிலையில் தோட்டக்கலைத்துறையில் மஞ்சள், மரவள்ளி, காய்கறி, கோகோ, பூச்செடிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க, 100 சதவீதம் மானியம் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது.
இதுகுறித்து ஈரோடு மாவட்ட தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கூறியதாவது:
மாவட்டத்தில் மழையின்றி வறட்சி நிலவுகிறது. விவசாயிகள் சொட்டுநீர் பாசன முறையை ஏற்படுத்தி, பயிர்களை பயிரிட வேண்டும்.கடந்தாண்டு வரையில் சிறு, குறு விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நிலத்தில் சொட்டுநீர் பாசன முறை அமைக்க மானியம் வழங்கப்பட்டது.தற்போது தோட்டக்கலைத்துறையில் இரண்டு ஏக்கர் வரையில் அதிகப்படுத்தி, 100 சதவீத மானியம் வழங்கப்படும். மஞ்சள் பயிரிட ஒரு ஏக்கருக்கும், மரவள்ளி, கோகோ பயரிட 2.5 ஏக்கருக்கும், காய்கறிகள் மற்றும் பூச்செடிகள் வைக்க ஒரு ஏக்கருக்குமாக, 44 ஆயிரம் ரூபாய் வரையில் மானியம் வழங்கப்படும்.

வறட்சி காலத்தில் சொட்டுநீர் பாசனத்தை ஏற்படுத்துவதன் மூலம், 60 சதவீதம் தண்ணீர், 50 சதவீதம் உரங்கள் மிச்சமாகக்கூடும். வேலையாட்கள் தேவைப்படாது. 25 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கக்கூடும். இத்திட்டத்தில் சொட்டுநீர் பாசனத்தை அமைக்க விவசாயிகள், தாலுகா அலுவலகத்தில் தங்கள் நிலத்துக்கான சான்றுகளை பெற்று, தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

அதிகாரிகளின் ஆலோசனை பெற்று செட்டுநீர் பாசனம் அமைத்து, பயிர்கள் பயிரிட்டு, ஆவணங்களை வழங்கும்பட்சம், அரசிடம் இருந்து, 100 சதவீதம் மானியத்தை, விவசாயிகளுக்கு பெற்றுத்தரப்படும், என்றனர்.

## காய்கறியை விட முட்டை கோழிகறிக்கு கிராக்கி

வத்தலக்குண்டு:காய்கறிகள் விலை உயர்வால் முட்டை, கோழி கறிக்கு கிராக்கி ஏற்பட்டு உள்ளது. பருவ மழை பொய்த்ததால் விவசாயம் கடந்த ஆண்டில் கேள்விக்குறியாகிவிட்டது. நட்ட பயிர்களை காப்பாற்ற முடியாமல் விவசாயிகள் தவித்தனர். இந்நிலையில் கிணற்று பாசனத்தை கொண்டு தண்ணீர் பாய்ச்சி ஒரு சில இடங்களில் பயிர்களை காப்பாற்றிவருகின்றனர்.இதில் தப்பித்தபயிர்கள் மூலம் தற்போது காய்கறிகள் அறுவடைசெய்யப்படுகிறது. இது தேவைக்கு போதுமானதாக இல்லாததால் விலைகள் அதிகரித்துள்ளது.வத்தலக்குண்டு மார்க்கெட்டிற்கு வழக்கமாக, வரும் காய்கறி வரத்து குறைந்து விட்டது. இதன் எதிரொலியாக காய்கறிகளின் விலை இரட்டிப்பாகிவிட்டது. நான்கு பேர் உள்ள குடும்பத்திற்கு வெங்காயம், தக்காளி தலா ஒரு கிலோ வாங்கினால் 130 ரூபாய் ஆகிவிடுகிறது. அதற்கு மேல் காய்கறி வாங்க வேண்டும் என்றால் மேலும் 100 தேவை. இதனால் நடுத்தர குடும்பத்தினர் வாரத்தில் மூன்று நாட்கள் காய்கறி வாங்கும் அளவை குறைத்து கோழி (ரூ. 120), முட்டை(ரூ. 3.90) வாங்கி சமாளித்து வருகின்றனர்.

## நூலிழை விலை குறைய வாய்ப்பு

திருப்பூர்:பின்னலாடை உற்பத்தி நிறுவனங்கள், நூலிழை கொள்முதலை குறைத்துள்ளதால், அதன் விற்பனை மந்தமாகிஉள்ளது. இதனால், நூலிழை விலை குறைய வாய்ப்பு உள்ளதாக, வியாபாரிகள் தெரிவித்தனர்.இந்த ஆண்டு, பருத்தி பருவம் துவங்கியபோது, நூலிழை ஏற்றுமதிக்கு அமோக வரவேற்பு இருந்தது. பருத்தி விலை உயர்ந்ததால், நூலிழை விலை, கிலோவுக்கு, 15 ரூபாய் வரை உயர்ந்தது. திருப்பூர் பின்னலாடை உற்பத்தியாளர்கள், நூலிழை விலையை குறைக்க வலியுறுத்தினர். இதையடுத்து, கடந்த 1ம் தேதி, நூலிழை விலை, கிலோவுக்கு, 7 ரூபாய் குறைக்கப்பட்டது. சில நூற்பாலைகள், மொத்த கொள்முதலில், கிலோவுக்கு, 20 ரூபாய் வரை சலுகை வழங்கின.சீனா மற்றும் வங்கதேசத்தில், பின்னலாடை உற்பத்தி பாதிப்படைந்திருப்பதால், பல நிறுவனங்கள், தற்போது நூலிழை இறக்குமதி செய்வதை,

தவிர்த்து வருகின்றன. எனவே, உள்நாட்டு விற்பனையை நம்பியே, நூலிழை வர்த்தகம் உள்ளது.இதனால், விலை மேலும் குறையும் என்பதால், திருப்பூர் பின்னலாடை நிறுவனங்கள், மொத்த கொள்முதலை தவிர்த்துவருகின்றன. ஆர்டர்கள் அதிகமாக உள்ளபோதும், குறைந்த அளவிலேயே கொள்முதல் செய்கின்றன.

இதுகுறித்து, நூலிழை வியாபாரிகள் கூறியதாவது:ஏற்றுமதி வர்த்தகம் பாதிப்படைந்துள்ள நிலையில், திருப்பூர் பின்னலாடை உற்பத்தி நிறுவனங்களும், மொத்தமாக நூலிழை கொள்முதல் செய்வதை, குறைத்து உள்ளன. மிகவும் குறைந்த அளவிற்கே கொள்முதல் செய்வதால், வர்த்தகம், 50 சதவீதம் குறைந்துள்ளது. வினியோகம் மற்றும் தேவையை பொறுத்தே, நூலிழை விலை அமைகிறது. எனவே, நூலிழை விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது.இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

# இன்றைய வேளாண் செய்திகள்

## 10.06.2013 A.M

---

## போதிய லாபம் இல்லாததால் வாழை சாகுபடியை கைவிடும் விவசாயிகள்



ஏரல்: தூத்துக்குடி மாவட்டம் ஏரல் மற்றும் சுற்றுவட்டார கிராம பகுதி புஞ்சை நிலங்களில் விவசாயிகள் அதிக அளவு வாழை பயிர் செய்து வந்தனர். கடந்த 30 வருடங்களுக்கு முன் இப்பகுதியில் உள்ள செம்மண் நிலப்பரப்பில் கோழிக்கூடு, நாடு உள்ளிட்ட வாழை ரகங்கள் செழித்து வளர்ந்தன. இதனால் விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்தது. நோய் தாக்கி நஷ்டம் ஏற்பட்டதால் கடந்த 10 வருடங்களாக சக்கை ரக வாழை பயிர் செய்ய தொடங்கினர். இது விவசாயிகளுக்கு ஒரளவு கை கொடுத்தது. இந்நிலையில் இப்பகுதியில் நிலத்தடி நீர் உப்பாக மாறியதால் வாழைகள் சரிவர வளராமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். மேலும் வாழைகளுக்கு களை எடுக்க, உரம் போட வேலை ஆட்களும் கிடைப்பதில்லை. இதனால் இப்பகுதி விவசாயிகள் வாழை சாகுபடியை கைவிட்டு முருங்கை விவசாயத்திற்கு மாறி வருகின்றனர். ஒரு சில இடங்களில் மட்டுமே முருங்கை பயிரிட்ட நிலையில் தற்போது 500 ஏக்கருக்கு மேல் முருங்கை சாகுபடி செய்துள்ளனர். முருங்கை விதை ஊன்றியதில் இருந்து 4 மாதத்தில் காய் பறிக்கலாம். ஒரு ஏக்கருக்கு ஸீ14 ஆயிரம் வரை கட்டுக்குத்தகைக்கு எடுத்து முருங்கை விவசாயத்தை மேற்கொள்கின்றனர். முதலில் விதை ஊன்றியதிலிருந்து வாரம் இரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினாலே போதுமானது. 10 நாட்களுக்கு ஒரு முறை முருங்கை மரத்திற்கு மருந்து தெளிக்க வேண்டும். இல்லாவிட்டால் பூச்சிகள் முருங்கை பூ, இலைகளை தின்று அழித்துவிடும். இதனால் பெருமளவு மகசூல் பாதிக்கப்படும். இங்கு பறிக்கப்படும் முருங்கை காய்கள் சாக்குபைகளில் அடைத்து நெல்லை நயினார்குளம்

மார்க்கெட்டுக்கு அனுப்பப்படுகிறது. அங்கிருந்து பிற மாவட்டங்கள், மாநிலங்களுக்கும் இவை அனுப்பி வைக்கப்படுகின்றன. தற்போது முருங்கை காய்கள் கிலோ ஸீ28 முதல் ஸீ30 வரை கொள்முதல் செய்யப்படுவதால் விசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பெங்களூர் நாவல் பழம் வரத்து அதிகரிப்பு : கிலோ விலை ரூ240



நெல்லை: பெங்களூரில் இருந்து நாவல் பழம் வரத்து அதிகரித்துள்ளது. கிலோ ரூ240க்கு விற்பனையாகிறது. தமிழக கிராமப்புற சாலையோரங்களிலும், குளக்கரை, ஆற்றங்கரைகளில் நாவல் மரங்களை காணாலம். வறண்ட பகுதிகள் தவிர நாவல் மரம் அனைத்து இடங்களிலும் வளரும். ஜுன் முதல் செப்டம்பர் வரை நாவல் பழங்கள் கிடைக்கின்றன. ஒரு மரத்திலிருந்து ஆண்டுக்கு 50 முதல் 80 கிலோ பழங்கள் கிடைக்கும். பெங்களூரில் விளைவிக்கப்படும் ஒட்டுரக நாவல் பழம் திரட்சியாக விளையக்கூடியது. இந்த வகை நாவல் பழம் தற்போது அதிகளவில் விற்பனைக்கு வந்துள்ளது. ஆனால் விலை அதிகமாக உள்ளது. ஒரு கிலோ பெங்களூர் நாவல் பழம் ரூ220 முதல் ரூ240 வரை விற்பனையாகிறது.

## 10.06.2013 A.M

## விவசாய கூலி தொழிலாளர்களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்கம் வலியுறுத்தல்

தர்மபுரி,

விவசாய கூலித்தொழி லாளர் களுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்மாநில விவ சாய தொழிலாளர் சங்க கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டது.

மாநிலக்குழு கூட்டம்

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநிலக்குழு கூட்டம் தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளியில் நடந்தது. இந்த கூட்டத்தில் சங்கத்தின் தேசிய தலைவர் ராமமூர்த்தி மாநிலத்தலைவர் தங்கமணி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலா ளர் நஞ்சப்பன் எம்.எல்.ஏ. மாவட்ட பொறுப்பாளர் பிரதாபன் சங்க துணைத் தலைவர்கள் பத்மாவதி, பழனிச்சாமி ஆகியோர்கோரிக் கைளை விளக்கி பேசினார் கள்.

கூட்டத்தில் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் முத்தரசன் பேசியதாவது:-

மத்திய அரசின் விவசாய விரோத கொள்கைகளால் கடந்த 10 ஆண்டுகளில் 8 லட்சத்து 67 ஆயிரத்து 582 விவசாயிகள் விவசாயத்தை கைவிடும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். விவசாயிகளின் எண்ணிக்கை குறையும் அதே நேரத்தில் விவசாய தொழி லாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பருவ மழை பொய்த்ததாலும் காவிரி ஆற்றில் தமிழகத்திற்குரிய தண்ணீர் கிடைக்காததாலும் தமிழகத்தின் பெரும்பகுதியில் விவசாய பணிகள் பாதிக்கப் பட்டுள்ளன.வறட்சி நிவாரணம்சென்னையை தவிர பிற மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக தமிழக அரசு அறிவித்து இருப் பது வரவேற்கத்தக்கது. வறட்சி நிவாரண பட்டியலில் தகுதி யுள்ள பலர் விடுபட்டிருப்பதாக மாநிலம் தழுவிய அளவில் புகார் எழுந்துள்ளது. தகுதி உள்ள அனைவருக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். வறட்சியின் காரணமாக விவசாயிகள் மட்டுமின்றி விவசாயத்தையே முழுமை யாக நம்பியிருந்த விவசாய கூலித்தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டு உள் ளனர். எனவே அவர்களுக் கும் வறட்சி நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசி னார். இந்த கூட்டத்தில் தமிழ் மாநில விவசாய தொழி லாளர் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## கணபதிபாளையத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 183 விவசாயிகளுக்கு ரூ.10¼ லட்சம் நிவாரண நிதி

பல்லடம்,

கணபதிபாளையத்தில் வறட்சியால் பாதிக் கப்பட்ட 183 விவசாயி களுக்கு ரூ.10¼ லட்சம் நிவாரண நிதி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

வறட்சி நிவாரண நிதி

பருவமழை பொய்த்து விட்டதால் விவசாயிகள் விவ சாயம் செய்ய முடியாமல் போய்விட்டது. இதனால் பயிர்கள் 50 சதவீதத்துக்கு மேல் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு அரசு வறட்சி நிவாரண உதவி வழங்கி வருகிறது. இந்த நிலையில் பல்லடம் கணபதிபாளையம் கிராம பகுதியில் பாதிக்கப் பட்ட 183 விவசாயிகளுக்கு (310 ஏக்கர்) ரூ.10 லட்சத்து 37 ஆயிரத்து 460 முதற்கட்டமாக அரசு ஒதுக்கி உள்ளது.

கே.பி.பரமசிவம் எம்.எல்.ஏ.

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்குவதற்கான தொடக்க நிகழ்ச்சி பல்லடம் அருகே கவுண்டம்பாளையத் தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலக வளாகத்தில் நடந்தது. விழாவுக்கு அச்சங்க தலை வர் கே.நாச்சிமுத்து தலைமை தாங்கினார். கே.பி.பரமசிவம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சில விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதி வழங்கி தொடங்கி வைத்தார்.

விழாவில் சங்க துணைத்தலைவர் துரைசாமி, மாவட்ட கவுன்சிலர் தண்ணீர் பந்தல் நடராஜன், ஒன்றிய கவுன்சிலர் ரத்தினசாமி, கரைப்புதூர் ஊராட்சி தலை வர் சென்னிமலைபாளையம் நடராஜன், பல்வேறு சங்க தலைவர் சொக்கப்பன், ருத்ர மூர்த்தி, அ.தி.மு.க. பல்லடம் ஒன்றிய துணைச்செயலாளர் சித்துராஜ், முன்னாள் சங்க தலைவர் துரைசாமி, சங்க செயலாளர் கோவிந்தசாமி மற்றும் பலர் கலந்து கொண் டனர்.

## தாராபுரத்தில் உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி தொடங்கியது

தாராபுரம்,

தாராபுரம் பகுதியில் உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி தொடங்கியது. வாரத்தில் 2 நாட்கள் உற்பத்தியாகும் உருண்டை வெல்லம் ஏலத்தில் விடப்படுகிறது.

உருண்டை வெல்லம்

கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்ட அமராவதி ஆற்றுப்படுகைகளில் கரும்பு சாகுபடி அதிக பரப்பளவில் நடைபெறுகிறது. கரும்பு சாகுபடி செய்துள்ள கரும்பு அறுவடை பருவம் வந்தவுடன் அதை சில விவசாயிகள் தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு விற்று விடுகிறார்கள்.சில விவசாயிகள் உருண்டை வெல்லம் தயாரிக்கும் வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறார்கள். வயல்களில் வாங்கும் கரும்புகளை வியாபாரிகள் அதை ஆட்களை கொண்டு வெட்டி உருண்டை வெல்லம் தயாரிக்கும் இடத்திற்கு கொண்டு வருகிறார்கள். பின்னர் கரும்புகள் அனைத்தும் எந்திரம் மூலம் அரைக்கப்பட்டு சாறு எடுக்கப்படுகிறது. இந்த சாறு குழாய் வழியாக ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டியை சென்றடைகிறது. அங்கு கரும்பு சாறு சுத்தம் செய்யப்பட்டு, ராட்சத கொப்பரையில் ஊற்றி காய்ச்சுகிறார்கள்.

1 டன் கரும்பு

அடுப்பு மேல் வைக்கப்பட்டுள்ள கொப்பரையில் கரும்பு சாறு நிரப்பிய பின்னர் 2 மணி நேரம் கொதிக்க வைக்கப்படுகிறது. இதில் கரும்பு சாறு கொப்பரையின் அடிப்பாகத்தில் உறைந்து விடாதவாறு, நீள இரும்பு அகப்பையால் கிண்டிவிடுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட பக்குவம் வந்தவுடன் கொப்பரையில் திரண்டு வரும், பாகுவை மற்றொரு பாத்திரத்தில் சேகரித்து, சேமித்து வைக்கப்படுகிறது. பின்னர் பாகு சூடு ஆறிய பின்னர் ஒரு வெள்ளை நிற துணியில் வைத்து சிறிய சிறிய துண்டுகளாக பிடித்து உருண்டை வெல்லம் தயாரிக்கப்படுகிறது. அதை தொடர்ந்து அவை நிழலில் காயவைக்கப்பட்டு மார்க்கெட்டிற்கு கொண்டு செல்லப்படுகிறது.

ஒரு டன் கரும்பில் இருந்து 120 கிலோ வரை உருண்டை வெல்லம் கிடைப்பதாக கூறப்படுகிறது. ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்கள் உருண்டை வெல்லம் தயாரிக்கிறார்கள். கொப்பரையில் உள்ள கரும்பு சாறு உருண்டை வெல்லமாக மாற்ற 3 மணிநேரம் ஆகிறது. இதற்கு கூலியாக ரூ.300 வழங்கப்படுகிறது. இந்த பணியில் 6 தொழிலாளர்கள் கூட்டாக ஈடுபடுகிறார்கள்.

தரம் பிரிக்கப்படும்

வறட்சியின் காரணமாக கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்து போனதால், தாராபுரம் பகுதியில் உருண்டை வெல்லம் தயாரிக்கும் பணி எதிர்பார்த்த அளவு இல்லை என்றும் தற்போது வெட்டப்படும் கரும்பு ஒரு மாதத்திற்கு மட்டுமே போதுமானது. அதன்பிறகு கரும்பு வரத்து இருக்காது. பின்னர் வேறு தொழிலுக்குதான் போக வேண்டும் என்றும் தொழிலாளர்கள் தெரிவித்தனர். தாராபுரம் பகுதியில் தாயாரிக்கப்டும் உருண்டை வெல்லம் தரம் பிரிக்கப்பட்டு, 30 கிலோ ஜிப்பமாக மாற்றி தாராபுரத்தில் உள்ள தனியார் வெல்லமண்டிக்கு கொண்டு

செல்லப்படுகிறது. இந்த வெல்ல மண்டி வாரத்தில் 2 நாட்கள் நடைபெறுகிறது. வெல்லமண்டிக்கு கொண்டு செல்லப்படும் வெல்லத்தை ஏலம் எடுக்க தமிழ்நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான வியாபாரிகள் வருகிறார்கள். அவர்கள் டன் கணக்கில் உருண்டை வெல்லத்தை வாங்கி செல்கிறார்கள்.

## கோடை உழவு செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

தா.பழூர்,

தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக் குனர் அண்ணாதுரை வெளி யிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது :-அரிய லுூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியத்தில் தற்போது கோடை மழை பரவலாக பெய்ய தொடங்கி யுள்ளது. இந்நிலையில் நிலக்கடலை, மக்காச்சோளம், முருங்கை, எள், தோட்ட பயிரான கத்தரி, மிளகாய், தக்காளி ஆகிய பயிர்கள் பயிரிடுவதற்கு முன் கோடை மழையை பயன் படுத்தி உழவு செய்வது மிகவும் சிறந்தது. கோடை உழவு செய்யப்பட்ட நிலத்தில் மழை நீர் 6 செ.மி ஆழம் வரை செல் கிறது. இதன்காரணமாக மண் ஈரம் ஆவியாகப்படுவது குறைகிறது. கரிசல் மண்ணாக இருந்தால் வெடிப்புகள் தடுக்கப் படுகின்றன. இதனால் நிலத் தில் மழைநீர் வேகமாக உறிஞ்சப்படுகிறது. மழையால் ஏற்படும் மண் அரிப்பு தடுக்கப் படுகிறது.

மண் எப்போதும் புழுதி யாகவே இருப்பதோடு விதைப் பதற்கு ஏதுவாக உள்ளது. கோடை உழவு செய்தால் களைகளின் இனவிருத்தி குறைக்கப்பட்டு, அதன் மூலம் நிலத்தில் உள்ள அதிகப் படி யான நீர் ஆவியாகாமல் தடுக்கப்படுகிறது. இது களை எடுக்கும் செலவை குறைப்ப தோடு நல்ல மகசூல் கிடைக்க வும் உதவுகிறது. கோடை உழவால் மண் ஈரம் சேமித்து வைப்பதுடன் பயிர் விளைச் சல் அதிக அளவு பெருக வாய்ப்புள்ளது. கோடை காலத்தில் ஒவ்வொரு முறை கோடை மழை பெய்யும்போது கோடை உழவு செய்ய வேண்டும். இதன் மூலம் மண்ணின் அடிப்பகுதி உள்ள ஈரப்பதம் காக்கப் படுகிறது. முன்பாகவே நிலத்தை தயார் செய்ய ஏதுவாகிறது. நெற்பயிர் சாகுபடிக்கு தேவையான நீர் தேவையை 20 சதவீத அளவிற்கு குறைக்கப் படுகிறது. எனவே விவசாயிகள் அனை வரும் தற்போது பெய்யும் மழையை பயன் படுத்தி கோடை உழவு செய்து பயன் பெறலாம்.இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

## பிரம்மதேசம் பகுதியில் தானே புயல் பாதிப்பால் பலாப்பழம் விளைச்சல் குறைவு

பிரம்மதேசம்,

பிரம்மதேசம் பகுதியில் தானே புயலால் பலா பழ விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அதன் விலை அதிகரித்துள்ளது.

<u>அதிக அளவில் பலா பயிர் செய்துள்ளனர்</u>

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அருகே உள்ள பிரம்மதேசம் மற்றும் அதனை சுற்றியுள்ள மரக்காணம், செய்யாங்குப்பம், செட்டிக்குப் பம், கீழ்குத்துப்பட்டு, செவிடங் குப்பம் உள்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் அதிக அளவில் பலா பயிர் செய்துள்ளர்.

விழுப்புரம் மாவட்டத்தில் பலா பழம் பிரம்மதேசம் பகுதியில் மட்டுமே பயிரிடப் பட்டுள்ளது மேலும் இங்கு விளையகூடிய பலா பழத்திற்கு எப்போதுமே சுவை அதிகம். இதனால் புதுச்சேரி, சென்னை உள்ளிட்ட இடங்களில் இருந்து ஏராளமான வியா பாரிகள் ஆண்டுதோறும் இங்கு வந்து பலாப் பழங்களை வாங்கி செல்வார் கள். இந்த நிலையில் கடந்த ஆண்டு அடித்த தானே புயலால் பிரம்மதேசம் பகுதியில் பயிரிடப்பட்டு இருந்த பலா மரங்கள் பலத்த சேதம் அடைந்தன. குறிப்பாக 25 வருடத்திற்கு மேலான பலா மரங்கள் வேரோடு சாய்ந்தது.

<u>விளைச்சல் பாதிப்பு</u>

இதன் காரணமாக நடப் பாண்டில் பலா பழ விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட் டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:

கடந்த பல வருடங்களாக நாங்கள் பேணி பாதுகாத்து வளர்த்து வந்த பல மரங்களின் கிளைகள் அனைத்தும் தானே புயலில் ஒடிந்து பலத்த சேதம் அடைந்தன. அதன் பாதிப்பு இன்னும் மறையாமல் அப்படியே இருப்பதால் நடப்பாண்டில் அதன் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதற் கிடையில் கடும் வறட்சியால் பலா பழ விளைச்சல் மேலும் குறைந்துள்ளது.

கடந்த காலங்களில் ஒரு பலா மரமானது சுமார் 40ல் இருந்து 50 பழங்கள் வரை விளைச்சலை கொடுத்ததால் எங்களுக்கு நல்ல வருமானம் கிடைத்து வந்தது. ஆனால் தானே புயல் பாதிப்புக்கு பின்பு தற்போது அவை 5 முதல் 10 பழங்களாக குறைந்துள்ளது. ஒரு சில மரங்கள் காய்க்காமல் அப்படியே இருப்பதால் நாங்கள் சாப்பிடுவதற்கு கூட பழங்கள் கிடைப்பதில்லை. எப்படி இருப்பினும் தானே புயலின் பாதிப்பு மறைய இன்னும் 2 ஆண்டுகள் ஆகும் என்று தெரிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

பிரம்மதேச பகுதியில் பலா விளைச்சல் குறைந்துள்ளதால் அதன் விலை அதிகரித்துள்ளது. அதன் படி கடந்த காலங்களில் ரூ. 50க்கு விற்கப்பட்ட ஒரு பழா பழமானது தற்போது ரூ.100க்கு விற்கபடுகின்றன. இதனால் பொது மக்கள் பழத்தினை வாங்க பெரிதும் தயக்கம் காட்டி வருகின்ற னர்.

**விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும் விவசாயிகள் சங்கத்தினர் வலியுறுத்தல்**

சிவகங்கை,

விடுபட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும் என்று விவசாயி கள் சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

மறுகணக்கெடுப்பு

சிவகங்கை மாவட்ட விவ சாயிகள் சங்க தலைவர் கலை யரசன் விடுத்துள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது:

201213ம் ஆண்டு ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சி காரணமாக தமிழகம் முழுவ தும் வேளாண் உற்பத்தி வெகு வாக பாதிக்கப்பட்டது. இத னால் தமிழக அரசு சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து நிவாரண தொகை வழங்க உத்தரவிட்டுள்ளது.

இதில் சிவகங்கை மாவட்டத் தில் அதிகாரிகளின் கணக்கெ டுப் பில் சில பகுதிகளுக்கு நிவா ரணம் வழங்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட் டுள்ளது. இதில் பெரிய கோட்டை பிர்காவில் உள்ள காயாங்குளம், குடஞ்சாடி, கிடாபுரி, தமறாக்கி பிர்க்கா குமாரப்பட்டி, தாராம் பேட்டை, மீனாட்சிபுரம் போன்ற கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு இந்த நிவாரண தொகை கிடைக்க வில்லை. எனவே மாவட்ட நிர்வாகம் விடுப்பட்ட கிராமங்களில் மறு கணக்கெடுப்பு நடத்தி பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரண தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

கூட்டமைப்பு தலைவர்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் புல்லுக்குடி உல.நேரு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கணக்கெடுத்து உடன டியாக நிவாரணம் வழங்க அரசு உத்தரவிட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளை கிராம நிர்வாக அலுவலர்கள் உதவியாளர்களை வைத்து காண்டு கணக்கெடுத்ததின் விளைவாக பல கிராமங்களில் பட்டாதாரர்களுக்கு ஒன்றும் கிடைக்காமல் போய்விட்டது. இதற்கு அரசு காரணம் என்று கூற முடியாது.

கணக்கில் விடுபட்ட விவ சாயிகள் முதல் வருக்கு மனுக் களை மட்டுமே அனுப்புவதை தவிர வேறு வழிதெரியாமல் உள்ள னர். சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்ட எல்கையில் உள்ள திருவாடானை, குளத் தூர், நாகனி, கற்களத்தூர் உள் ளிட்ட வருவாய் கிராமங்களில் பல விவசாயிகள் பெயரில் பட்டாக்கள் விடுப்பட்டுள் ளன. இதனால் அவர்களுக்கு எந்த வறட்சிநிவாரணமும் கிடைக்காமல்போய்விட்டது. எனவே தமிழக அரசுவிடுப் பட்ட விவசாயிகளுக்கு அர சின் முழு நிவாரண தொகையை வழங்க வேண்டும் என கேட்டுகொள்கிறேன். இவ் வாறு அவர் அந்த அறிக்கை யில் கூறியுள்ளார்.